Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா செய்தி : 021 493 0000 விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :28 மார்கழி 08ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 24 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த
Chichester
பல்கலைக்கழகத்தின்
பட்டப்படிப்பினை இப்பொழுது
யாழ்ப்பாணத்தில்
தொடர்வதற்கும் அதற்கான
புலமைப் பரிசிலைப் பெற்றுக்
கொள்வதற்கும் வட மாகாண
மாணவர்களுக்குக் கிடைத்துள்ள
அரிய சந்தர்ப்பம்

பக்கம் 07

# தொடரும் தேடல்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கொட்டும் மழையில் நேற்றும் போராட்டம்

**கிளிநொச்சி, டிசெம்பர் 24**

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுக் கிளிநொச்சியில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தெரிவித்துள்ள கருத்துக்குக் கண்டனம் தெரிவித்தே அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். 23






## கரு காட்டம்

### பதில் பொலிஸ் மா அதிபரிடம் கேட்கின்றார் விளக்கம்

கொழும்பு, டிசெ.24

முன்னாள் அமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவுக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்றஅனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட் 23

## ஜனவரி 3ஆம் திகதி சஜித்துக்குப் பதவி!



கொழும்பு, டிசெ.24

ஜனவரிமாதம் கூடும் நாடாளுமன்ற அமர்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவை உத்தியோகபூர்வமாக எதிர்க் கட்சித் தலைவராக அறிப்பதற்குத் தீர்மானிக்கப் 23

## 'விக்கிரமாதித்தன்' ஆக மாறிய ராஜித

### *3 ஆவது முறையாகவும் முன்பிணை கோரி மனு*



கொழும்பு, டிசெ.24

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன நேற்று மூன்றாவது முறையாக முன்பிணைக் கோரிக்கை மனுவைநீதிமன்றில் 04

**முச்சந்தி முரளி**



"ஜாமீன் கடலிலையே இல்லையாம். இந்த விறுத்தத்தில ராஜிதவுக்கு மட்டும் சிக்குமா?"

## குளத்தில் இறங்கியவர் மூழ்கிப் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.24

கோயில் அருகே உள்ள குளத்தில் இறங்கியவர் குளத்தில் மூழ்கி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணம். நவாலியில் நடந்துள்ளது.

3 பிள்ளைகளின் தந்தையான நாகராசா பரமலிங்கம் (வயது-49) என்பவரே உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை 6 மணியளவில் நவாலியில் உள்ள கோயில் ஒன்றுக்குச் சென்ற அவர், வழிபட்டு விட்டு அருகில் இருந்த தாமரைக் குளத்தில் இறங்கியுள்ளார். அப்போது அவர் குளத்தில்மூழ்கியுள்ளார். அங்கிருந்தவர்களால் அவர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் 23

## என்னமோநடக்குது மர்மமா இருக்குது!

### கூட்டத்தில் விழித்த செயலக அதிகாரிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடந்தது என்ன கூட்டம் என்று தெரியாது அதிகாரிகள் விழிபிதுங்கி 23

## ராஜிதவுக்கு 'பொக்ஸ்'

கொழும்பு, டிசெ.24

முன்னாள் அமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் நேற்றுத் தடை விதித்தது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் முன்வைத்த 04

## கால்பதிக்கும்பௌத்தம்: கூடுகிறது மாநகர சபை

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி உருவாக்கப்படும் பௌத்த மதச் சின்னங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் மாநகர சபையின் சிறப்பு அமர்வு கூட்டப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் உள்ள யாழ்ப்பாணம் சிறைச்சாலை வளாகத்தின் வெளிப்புறச் சுவர் ஏற்கனவே வீதியை ஆக்கிரமிக்கும் வகையில் உள்ள நிலையில், அந்தச் சுவரில் விஜ 23

## தமிழ் மக்கள் உள்ளங்களை கொள்ளையிட அபிவிருத்தி

### திட்டம் வகுக்கின்றார் டியூ

கொழும்பு, டிசெ.24

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தேசிய மட்டத்தில் முன்னுரிமை வழங்கி அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமே அந்த மக்களின் உள்ளங்களை வெற்றிகொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் 23

## குருநகரில் சிக்கியது பீடி இலை

யாழ், டிசெ.24

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்று இரவு 46 கிலோ 250 கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட் 23

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலுப்பையடி வீதி சீரமைப்பு ஆரம்பம்

*சரா எம்.பி. தொடக்கிவைத்தார்*



கொடிகாமம், டிசெ. 24
மட்டுவில் மத்தி பத்தாம் வட்டாரம் இலுப்பையடி இணைப்பு வீதி 2 இன் சீரமைப்பு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 20 லட்சம் ரூபா செலவில் இந்த வீதி சீரமைக்கப்படுகின்றது.

மட்டுவில் கலைவாணி சனசமூக நிலையத் தலைவர் பொ.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்றஉறுப்பினர் ஈ.சரவணபவன், உதயன் குழும நிர்வாக இயக்குநர் திருமதி யசோதை சரவணபவன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், பிரதேச சபை உறுப்பினர்களான மதன்ராஜ், சு.கேதீஸ்வரன், ஆசிரியர் அ.செந்தூரன், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ கந்தசாமி, கிராம மக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (த159)

# நீதி கிடைக்கும்

## சஜித் நம்பிக்கை



கொழும்பு, டிசெ.24
அரசியல் பழிவாங்கலை இலக்காகக் கொண்டு கைது செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்குச் சுயாதீன நீதிமன்றம் சரியான நீதியை வழங்கும் என்ற நம்பிக்கை அதிகமாகவே உள்ளது. சர்வாதிகார ரீதியில் அதிகாரத்தைப் பிரயோகித்து ஜனநாயகத்தைக் கேள்விக்குறியாக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

விகாரமாதேவி பூங்கா வளாகத்தில் நேற்று மாலை நடத்தப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் மதவழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகவும், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவும் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டுள்ளார். நிறைவுக்கு கொண்டு வரப்பட்ட அரசியல் பழிவாங்கல்கள் மீண்டும்தலைதூக்கியுள்ளன. அவற்றை ஜனநாயக ரீதியில் நிறைவுக்கு கொண்டு வருவது அவசியமாகும்.

சட்டவிரோதமான முறையில் இடம்பெற்ற கைது மற்றும் அரசியல் பழிவாங்கலுக்கு சட்டமார்க்கத்தின் ஊடாகவே தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும். அரசியல் ரீதியான செயற்பாடுகள் மாறுப்பட்டதாகக் காணப்படலாம். ஆனால் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான குரல் ஒன்றாகவே காணப்பட வேண்டும். என்றார். (எ)

# கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம்

கொடிகாமம்,டிசெ.24
சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சங்கப் பணிமனையில் தலைவர் செ.செந்தூரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கால்நடை வைத்திய அதிகாரி பிரபாகரன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.ஜெகராசா மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் பால் உற்பத்தியின் அளவைக் கூட்டுதல், தென்மராட்சி சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் பால் விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்தல், பால் உற்பத்தி பொருள்களான யோகட், தயிர் மில்க்ரொபி, பன்னீர் என்பன விற்பனை செய்தல், பைக்கற் யூஸ் தயாரிக்கும் இயந்திரம் புதிதாக கொள்வனவு செய்தல் தொடர்பாக ஆராயப்பட்டு இயந்திரக் கொள்வனவிற்கான அனுமதி பெறுவதென தீர்மானம் எடுக்கப்பட்டது.

மருந்து விற்பனை மற்றும் பால் விற்பனை நிலையங்களுக்கு புதிய பயிற்றுவிப்பாளர்களை சங்க எல்லைக்குட்பட்ட இருவர் முன்னுரிமை அடிப்படையில் ஆறு மாத பயிற்சிகள் வழங்கிய பின் நியமனம் வழங்குவதென தீர்மா னிக்கப் பட்டது. (ஜ159)



# ஓட்டோச் சாரதி மீது தாக்குதல்

## ஓட்டோவும் தப்பவில்லை

வவுனியா,டிசெ. 24
வவுனியா பன்றிக்கெய்த குளம் பகுதியில் கடந்த சனிக்கிழமை முச்சக்கரவண்டி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவருடைய முச்சக்கர வண்டியும் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது என்று முறையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நயினாமடுவில் வசிக்கும் மனோகரன் டிலக்சன் (வயது 24) என்பவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர் தனது காணியில் முச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு உணவருந்த கடைக்குச் சென்றபோது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. விசாரணை நடக்கின்றது என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர். (த110)

# பெண் மீது தாக்குதல்

## இளைஞனுக்கு மறியல் உத்தரவு

வவுனியா, டிசெ. 24
வவுனியா பசார் வீதியில் வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் பெண்ணைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

பெண் ஊழியர் கடந்த சனிக்கிழமை வர்த்தக நிலையத்திலுள்ள கண்ணாடிப் பொருள் ஒன்றை உடைத்தார் என்று குற்றஞ்சாட்டி வர்த்தக நிலைய உரிமையாளரின் மகன் அந்தப் பெண்ணை நிலத்தில் தள்ளி விட்டுத் தாக்கினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. அவ்வாறு தாக்குவதை நேரில்க ண்டார்கள் என்று கூறப்படும் நபர்கள் அது பற்றிக் கேள்வியெழுப்பினர். அதனால் அங்கு மக்கள் கூட்டம் திரண்டது. வீதியில் செல்லமுடியாதளவுக்கு மக்கள் கூடிவிட்டனர்.

அங்கு சென்ற வவுனியா பொலிஸார் தாக்குதல் நடத்தினார் என்று குற்றஞ் சாட்டப்பட்ட இளைஞனையும் பெண்ணையும் விசாரணைக்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

தாக்குதலுக்குள்ளானார் என்று கூறப்பட்ட பெண் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தாக்குதல் நடத்திய சந்தேகநபர் பொலிஸ் தடுப்பில் விசாரணையில் இருந்தார்.

பின்னர் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணிகள் சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரினர்.

பொலிஸார் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தனர். விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (தரி4)

# வவுனியாவில் தூக்கில் சடலம் மீட்பு

வவுனியா, டிசெ. 24
வவுனியா ஆதிவிநாயகர் கோவில் குளக்கட்டு வீதியோர வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் முதியவரின் சடலத்தை நேற்று மீட்டதாகப்பொலிஸார் தெரிவித்தனர்.

தனிமையில் வசித்து வந்த அவருக்கு உணவு கொண்டுசென்றவர் அது பற்றிப் பொலிஸாருக்கு அறிவித்தார்.

அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர். அதே இடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் செல்லம்மா (வயது 72) என்பவரே சடலமாக மீட்கப் பட்டார். (தரி4)

# முல்லையில் கடும் மழை

கொழும்பு, டிசெ.24
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக ஓய்திருந்த மழை நேற்றும் மீண்டும் பெய்ய ஆரம்பித்துள்ளது. அதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மழையால் உபஉணவுப் பயிர்ச் செய்கை பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (எ500)

# வெங்காய மூடைக்குள் கற்கள்

சாவகச்சேரி, டிசெ. 24
இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காய மூடைக்குள் கற்கள் அதிக அளவில் காணப்படுகின்றன என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

தற்போது சின்ன வெங்காயத்தின் விலை கிலோ 400 ரூபாவைத் தாண்டியுள்ளது. நுகர்வோர் பெரிய வெங்காயத்தைக் கொள்வனவு செய்வதில் ஆர்வங்காட்டி வருகின்றனர். இதனால் இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தை வியாபாரிகள் கொள்வனவுசெய்து விற்பனை செய்து வருகின்றனர்.

பல நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் உள்நாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

துருக்கி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வெங்காய மூடைக்குள் கற்கள் காணப்படுகின்றன என்றும் 50 கிலோக்கிராம் நிறையுடைய வெங்காய மூடைக்குள் சராசரியாக 3 கிலோக்கிராம் நிறையுடைய கற்கள் காணப்படுகின்றன என்றும் ஏற்றுமதி செய்யப்படும் நாட்டிலிருந்துகற்கள் சேர்க்கப்படுகின்றனவா அல்லது விலை அதிகரிப்பைப் பயன்படுத்தி இங்குள்ள மொத்த வியாபாரிகள் கலப்படம் செய்கின்றார்களா என்று புரியவில்லை என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர். (த9)

# எம்.சி.சி. ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டும்!

## சஜித் பிரேமதாச காட்டம்



கொழும்பு, டிசெ.24

மிலேனியம்சவால்உடன்படிக்கைகிழித்தெறியப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கிரில்லவல நகரில் கடந்த சனிக்கிழமை அவர் நடத்திய மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

காலநிலை மற்றும் வானிலை மாற்றத்தால், புவியின் வெப்பநிலை காரணமாக ஓசோன் மண்டலத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வருடாந்தம் கடல் மட்டம் அதிகரித்துச் செல்வதால் எமது நாட்டுக்கு என்ன நேரப் போகின்றது?. இவை அனைத்தும் மிகவும் ஆழமான சிந்திக்க வேண்டிய விடயங்கள்.

இத்தகைய விடயங்களை எதிர்நோக்குவது தொடர்பாக நாட்டில் சிறந்த கொள்கையொன்றை வகுத்தல் வேண்டும். சூழலுக்கு மாத்திரமன்றி நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்வதற்கும் எதிர்காலத்திற்கும் இது அவசியம்.

எவ்வாறான நாட்டை நாம் நிர்வகிக்கின்றோம்? எவ்வாறான நாட்டை கையளிக்கின்றோம் என்பது தொடர்பாகக் கவனம் தேவை. வரையறுக்கப்பட்ட தரமான 60 வீதமான சந்தைக்கு எமது ஏற்றுமதி முன்னெடுக்கப்படுகின்றது. ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நாட்டின் காலநிலை தொடர்பான நிகழ்ச்சி நிரலை அடிப்படையாக வைத்து, அச்சுறுத்தல் விடுக்கக்கூடும். இதன்போது ஏற்றுமதிக்கும் தடைகள் விதிக்கக்கூடும். எங்களுடையஏற்றுமதியின்பல்வகைதன்மை பேணப்பட வேண்டும். மிலேனியம் சவால் உடன்படிக்கையின் ஊடாக இந்த நாடு அமெரிக்காவுக்கு அடிமையாகவுள்ளது என கூறப்படுகின்றது. அது முழுமையாக கிழித்தெறிய வேண்டும். எக்சாவை கிழித்தெறிய வேண்டும். சோபா உடன்படிக்கையை கிழித்தெறிய வேண்டும்.

தேவை என்றால் சிங்கப்பூர் - இலங்கைக்கு இடையிலான வர்த்தக உடன்படிக்கையையும் முழுமையாக இல்லாமல் செய்ய வேண்டும் - என்றார். (ஏ)

## நேரடி ஒப்பந்தங்களுக்கு

# தடை

கொழும்பு, டிசெ. 24

வெளிநாட்டு முதலீட்டாளர்கள், முன்னணி முகவர்கள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் தூதரகங்களின் நேரடி ஒப்பந்தங்கள் அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கைகள் ஆகியவற்றை மாகாண சபைகள் உள்ளிட்ட அரச அமைச்சர்கள் மற்றும் அரச நிறுவனங்கள் செய்துகொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்தத் தடையுத்தரவு உடனடியாக நடைமுறையாகும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்தால் கொண்டுவரப்பட்டுள்ளது. அவ்வாறான ஒப்பந்தங்கள் அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கைகள் உரிய நடைமுறைப்படியே செய்துகொள்ளப்பட வேண்டுமென்றும் அனைத்துத் தரப்பினருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, நிதி அமைச்சு, சட்டமா அதிபர், மத்திய வங்கி ஆகியவற்றின் அனுமதிக்கு அமைவாக ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் செய்ய முடியும்.

ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் எவ்வாறு செய்துகொள்ளப்பட வேண்டும் என்பதைக் கூறும் சுற்றறிக்கையை ஜனாதிபதியின் செயலர் பி.பீ.ஜயசுந்தர அனைத்து அமைச்சுக்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

நிழல் அமைச்சுக்கள், மாகாண சபைகள், அரச திணைக்களங்கள் மற்றும் அரச சார்புடன் கூடிய முகாமைகள் ஆகியவை வெளிநாட்டு முதலீட்டாளர்கள், கடன் வழங்கும் முகவர்கள் வெளிநாட்டு அமைப்புகள் மற்றும் தூதரகங்களுடன் பல்வேறு நிதித் திட்டங்கள், கடன் வாங்கும் ஏற்பாடுகள் மற்றும் இதுபோன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. சில நேரங்களில் அதற்கு அப்பாலும் சென்று அரச வரைவுக்குள் உள்ள நடைமுறையை பின்பற்றாமல் உள்ளன. இதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஜனாதிபதியின் செயலர் கூறியுள்ளார்.

அதேவேளை வெளிநாட்டு உறவுகள் தொடர்பான அமைச்சுக்கள், சம்பந்தப்பட்ட திறைசேரி திணைக்களங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கு எந்தவித முன்அறிவிப்பும் இன்றி இவ்வாறான பல கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்றன என்று சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் செய்துகொள்ளப்பட்ட பல இரு தரப்பு மற்றும் பல தரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் முறையற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டதுடன் தகுந்த தேவை மதிப்பீடுகள் அல்லது போதுமான தயார்ப்படுத்தல்கள் இன்றி செய்யப்படுவதால் அவற்றை நடைமுறைப்படுத்தும்போது பல்வேறுபிரச்சினைகள்மற்றும்சட்டப்பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இனிமேல் சமர்ப்பிக்கப்படும் அனைத்து முதலீட்டு விண்ணப்பங்களும் இலங்கை முதலீட்டு சபையின் ஊடாகவே சமர்ப்பிக்கப்பட வேண்டும். (ஒ.5)

# எக்னெலிகொட கடத்தல் சம்பிக்கவுக்குத் தொடர்பாம்!

## புதுக் கதை அவிழ்க்கிறார் சட்டத்தரணி அஜித் பிரசன்ன



கொழும்பு, டிசெ. 24

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்ட சம்பவத்துக்கு முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவே பொறுப்பு என்று பதில் பொலிஸ்மா அதிபரிடம் கடந்த 21ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார் எனவும், சட்டவாளரும், முன்னாள் இராணுவ அதிகாரியுமான மேஜர் அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த முறைப்பாட்டில் மூன்று முக்கிய விடயங்கள் ஆதாரங்களுடன் முன்வைக்கப்ப ட்டுள்ளன. சம்பிக்க ரணவக்கவை கைதுசெய்து விசாரித்தால் கடத்தல் சம்பவத்தின் உண்மை வெளிப்படும்.

ரணவக்கவின்நடத்தைகுறித்து 2009ஆம் டிசெம்பர் 8 ஆம் திகதி லங்கா இநியூஸ் இணையதளத்தில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது. பிரகீத் எக்னெலிகொட மீது சம்பிக்க ரணவக்க கோபமாக இருந்தமையை நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் உள்ளன.

ரணவக்கவின் மனைவி நிர்மலா, 2009 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் எக்னெலிகொடவைச் சந்தித்தார் என்றும், ரணவக்க தன்னை எவ்வாறு துன்புறுத்தினார் என்பது பற்றிய தகவல்களை அவருக்கு வழங்கியதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்டுரை வெளியான பின்னர், அதனை எழுதியவரைக் கண்டு பிடிக்க சம்பிக்க மூன்று நாள்களைச் செலவழித்தார் என்று உதய கம்மன்பில செய்தியாளர் சந்திப்பில் கூறியிருந்தார். இந்த ஊடக சந்திப்பு பற்றிய செய்தி மௌபிம நாளிதழில் வெளியானபின்னர், மௌபிம மீதும், உதய கம்மன்பில மீதும் சம்பிக்க ரணவக்க வழக்குத் தாக்கல் செய்தார், பின்னர் அந்த வழக்கை விலக்கிக் கொண்டார்.

இந்தஉண்மைகள்அனைத்தும் எக்னெலிகொட கடத்தலுடன் சம்பிக்க ரணவக்க தொடர்புபட்டுள்ளார் என்பதைக் குறிக்கிறது. இந்த விடயங்கள் அனைத்தும் முறைப்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால், எக்னெலிகொடவைக் கடத்தினர் என்ஒன்பது இராணுவத்தினர் மீது, சிறப்பு மேல் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசியல் செல்வாக்கைப்பயன்படுத்திரணவக்க இந்த வழக்கில் இருந்து விடுபட்டுள்ளார், என்றார். (ஒ.5)

# செபமாலை ஆலய வளாகம் துப்புரவு

கொழும்புத்துறை சென்.றொசாறியன் சனசமூக நிலையத்தினர் டெங்கு ஒழிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வளாகத்தைத் துப்புரவு செய்தனர். அடுத்த கட்டமாக வீடு வீடாகச் சென்று டெங்கு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று சனசமூக நிலைய தலைவர் தெரிவித்தார். (து-135)



## மெக்சிக்கோவில்

# கடத்தல்காரர்களிடமிருந்து இலங்கையர் இருவர் மீட்பு

கொழும்பு, டிசெ. 24

மெக்சிகோவில் கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு இலங்கையர்கள் உள்ளிட்ட எட்டுப் பேர், அந்த நாட்டு எல்லையோர பொலிஸாரால் மீட்கப்பட்டு ள்ளனர். கடத்தி தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு இலங்கையர், ஆறு நேபாளிகளை அச்சுறுத்திகப்பம் பெற்று வந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

கடத்தி வைக்கப்பட்டிருந்த எட்டுப் பேரும் மெக்சிகோவின் தென்பகுதி நகரான அன்ரிகுவோ மொரெலோஸ் என்ற நகரில் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் மீட்கப்ப ட்டுள்ளனர்.

கடத்தப்பட்டவர்கள் எல்லையோர கிராமத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் கிடைத்த தகவலை அடுத்து, விரைந்து சென்ற மெக்சிகோ எல்லைப் பொலிஸார் அவர்களை மீட்டுள்ளனர்.

பொலிஸார் அங்கு சென்றபோது, வீட்டிலிருந்து எட்டு ஆண்கள் உதவி கோரியபடி வெளியே ஓடினர். கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்ற தகவலை மெக்சிகோ பொலிஸார் வெளியிடவில்லை.

கடத்தல்காரர்கள் தம்மை மூன்று நாள்களாக அந்த வீட்டில் உணவு, குடிதண்ணீர் எதுவும் வழங்காமல் அடைத்து வைத்து, உறவினர்களிடம் பணம் கோரி வந்தனர் என்று மீட்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க எல்லையைக் கடக்க முயன்ற போதே தாம் கடத்தல்காரர்களிடம் சிக்கினர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

அவர்களுக்கு உணவு, குடிதண்ணீரை உடனடியாக பொலிஸார் வழங்கினர். மருத்துவ சோதனைகளுக்குப் பின்னர், அதிகாரிகள் இந்த வழக்கை ஆவணப்படுத்தியுள்ளனர். சட்டவாளர்களுடனான நேர்காணல்களுக்குப் பிறகு, இவர்கள் மெக்சிகோவில் இருப்பதற்கான சட்டபூர்வமான நிலையை ஆராய்வதற்காக மெக்சிகோவின் தேசிய குடிவரவு நிறுவனம், அழைத்துச் சென்றுள்ளது. (ஒ.5)

## விக்கரமாதித்தன்...

தாக்கல் செய்தார். அந்த மனு எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தன்னைக் கைது செய்வதைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில், முன் பிணை கோரி மனு ஒன்றை கடந்த 19ஆம் திகதி வியாழக்கிழமை ராஜித சேனாரத்ன தாக்கல் செய்திருந்தார். மறுநாள் வெள்ளிக்கிழமை அந்தப் பிணை மனு மீதான விசாரணையின் பின்னர் அந்த மனு நிராகரிக்கப்பட்டது. அன்று மாலை மீண்டும் முன் பிணைக் கோரி ராஜித சேனாரத்ன மனுத் தாக்கல் செய்தார்.

நேற்றுக்காலை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் இரண்டாவது முன் பிணைக் கோரிக்கை மனு ஆராயப்பட்டது. ராஜித சேனாரத்னவும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார். எனினும் அந்த முன்பிணைக் கோரிக்கை மனுவையும் நீதிமன்று நிராகரித்தது. அது நிராகரிக்கப்பட்டது. அதையடுத்து ராஜித சேனாரத்ன மீண்டும் மூன்றாவது முறையாக முன் பிணை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பில் தன்னைக் கைதுசெய்வதற்காகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தயாராகி வருகின்றனர் என்று தனது முன்பிணை மனுவில் ராஜித குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகத் தன்னைக் கைதுசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது என்று சுட்டிக் காட்டிய அவர், அவ்வாறு கைது செய்வதற்கு முன்னர் தன்னை முன் பிணை அடிப்படையில் விடுவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவின் முன்பிணை மனு எதிர்வரும் 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதால் அன்றுவரை அவரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்ய முடியாது என்று ராஜிதவின் சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (எ-22)

## ராஜிதவுக்கு...

கோரிக்கைக்கு அமையவே கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. குடியகல்வு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு இந்த உத்தரவை நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ராஜித சேனாரத்ன ஏற்பாட்டில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்புத் தொடர்பான வழக்குக் காரணமாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தியாளர் சந்திப்பில் வெள்ளை வான் தொடர்பாகச் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(எ-22)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 ஆம் ஆண்டு பிறந்த ரேவதி நட்சத்திரம் கிரகபாவம் 20 ¼ செவ்வாய்க் குற்றமற்ற அரச தொழில் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
(மணமகனுக்கு முதுசம் உண்டு)

077 4345654/ 077 8990492

### வாகனம் விற்பனைக்கு

2017 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட CAV இலக்கமுடைய NANO கார் விற்பனைக்கு உண்டு.
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - 077 020 0185

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 28.11.2019 வியாழக்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் இரத்தினம் சரஸ்வதி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (25.12.2019) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(CS 30133)(4.17)

## மரண அறிவித்தல்



### திருமதி பொன்னையா அன்னலட்சுமி

மாத்தளையை பிறப்பிடமாகவும், கும்பழாவளை அளவெட்டியையும், யாழ்ப்பாணம் கோவில் வீதியையும் வதிவிடமாகக் கொண்டிருந்த திருமதி பொன்னையா அன்னலட்சுமி நேற்று **(23.12.2019)** திங்கட்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

,அன்னார் முன்னாள் அளவெட்டி பிரபல சுருட்டுத்தொழில் அதிபரும் வர்த்தகருமான காலஞ்சென்ற முருகர் பொன்னையாவின் அன்பு மனைவியும் தங்கேஸ்வரகிருஷ்ணதாசா, சிறிதரன், ஜெயந்தி, ஜெயக்குமார், சுதா ஆகியோரின் தாயாரும், சந்தானலட்சுமி, காலஞ்சென்ற ரோகினி, கனகசபை, வசந்தாதேவி, லிங்கராசா ஆகியோரின் சிறிய தாயாரும், சிவராசசுந்தரம், சாந்தகுமாரி, சறோசாதேவி, ஸ்ரீஸ்கந்தராசா, உதயகுமாரி, சண்முகானந்தன், காலஞ்சென்ற செல்லையா, குருசாமி நந்தினி, பரமலிங்கம், சந்திராதேவி ஆகியோரின் மாமியும் துஸ்யந்தி-ராஜா, சிந்துஜா, கஸ்தூரி, ரம்மியா- நிரஞ்சனன், ஏரிஜ்- சோபனா, மேனஜன், ஜனந்தினி, நிதுசன், நிசாந், நிலான், அனாலிஜா, அருண், அஜய், விமலன், முகுந்தன், ரஜனி, ராஜ்மோகன், ராகவன், பிரபாகரன், கஷானி, ஸ்ரீசங்கர், ஸ்ரீகாந்தன், காயத்திரி ஆகியோரின் பேர்த்தியும் நிலா, வர்ஷினி, ஆர்த்திகா, அனுசன், அனித்தா, சந்தோஸ், லைவஸ்ணவி, பிரணவி, சாருஜன், பிரவீனா, பிரபஞ்சன், பிரியாங்கன், அபிப்பிரியன், அக்ஷயினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(24.12.2019)** செவ்வாய்க்கிழமை பிற்பகல் **3.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.126, கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

CS24226(16.17)

**021 221 9804**

## விழிநீர் அஞ்சலி



யா/கோப்பாய் நாவலர் தமிழ்
வித்தியாலயத்தின் ஆசிரியர்
திருமதி **மங்கையர்த்திலகம்**
**பரமானந்தம்** அவர்களின்
பாசமிகு தாயார்

### சின்னாச்சிப்பிள்ளை செல்லையா

அவர்கள் நேற்று முன்தினம் (22.12.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 - 03 - 1952 | 23 - 12 - 2019 |



### திருமதி சுசீலாதேவி பஞ்சலிங்கம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசீலாதேவி பஞ்சலிங்கம் நேற்று (23.12.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற றட்ணவடிவேல் சந்திரக்கண்டு தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையா - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குகதாசன் மற்றும் விமலாதேவி, இந்துமதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் கல்யாணி, வரதன், ஜனனி, நிரோஜினி ஆகியோரின் அன்புத்தாயாரும் ராஜ்குமார், சஞ்சிதாப், பார்த்திபன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சாரபி, சரண், டிசானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25-12-2019) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**பூதவராயர் கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை தகவல்: குடும்பத்தினர்**

# பொலிஸ் அதிகாரிக்கு இடமாற்றம்

வவுனியா, டிசெ.25
வவுனியா தலைமைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி பிரசன்ன வெலிகள கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். இந்த இடமாற்றம் நேற்று பதில் பொலிஸ் மா அதிபரால் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியாவுக்கான புதிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நியமிக்கப்படும்வரை வவுனியா பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி கடமைகளை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.
பிரசன்ன வெலிகள கடந்த 4 மாதங்களாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றினார். (எ-110)

**நிர்வாக உதவியாளர் தேவை**

திருமூலர் யோக அறச்சாலையின் நூலகத்துக்குப் பெண் நிர்வாக உதவியாளர் தேவை.

- Computer
- Smartphone,
- Filling

மற்றும் நிர்வாக அனுபவமுள்ள 40 வயதுக்கு உட்பட்ட ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை 15.01.2020 இற்கு முன் ranjani218@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். (CS/30126)(11,17)

**University of Jaffna – Sri Lanka**
**WALK – IN – INTERVIEW**
**NIHR AF Project - Faculty of Medicine, University of Jaffna**

Post of Research Fellow for Health Economy/Statistics Epidemiology/ Information Technology/ Health System Research (Full Time, on Contract Basis)

University of Jaffna, Sri Lanka established a medical research on Global Health Research on Atrial Fibrillation Management Project in partnership with University of Birmingham, UK funded by National Institute for Health Research (NIHR), UK

- POST OF RESEARCH FELLOW (FULL TIME) – ON CONTRACT BASIS – 04VACANCIES ( HEALTH ECONOMY – 01 /STATISTICS EPIDEMIOLOGY – 01 / INFORMATION TECHNOLOGY – 01 /HEALTH SYSTEM RESEARCH – 01)

Walk in Interview for the above positions - On Contract Basis will be held on 02.01.2020 from2.00 PM to4.00PM, at the Board Room, Faculty of Medicine, University of Jaffna.

Eligible Candidates are requested to be present for an interview with self-prepared separate application for each post in the prescribed format available in the University website along with relevant original certificates on the date and the time mentioned above.

For further details please refer the University of Jaffna website – www.jfn.ac.lk

**Registrar**
**University of Jaffna**

**மரண அறிவித்தல்**

தோற்றம்
15
...
11
...
1945



மறைவு
23
...
12
...
2019

(CS30141)(16/17)

**தங்கராசா நல்லம்மா**

அச்சுவேலி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா நல்லம்மா நேற்று **(23.12.2019)** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு தங்கராசாவின் அன்பு மனைவியும் றகிம்றாஜ் அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று **(24.12.2019)** செவ்வாய்க்கிழமை மதியம் **1.00** மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 322 2871**
தகவல்: குடும்பத்தினர்
மகன்- றகிம்றாஜ்

# 55 கோடி ரூபாவில் செய்பவை என்ன?

## மன்னாரில் ஆராய்வு



மன்னார், டிசெ. 24
ஆசிய அபிவிருத்தி வங்கியின் 55 கோடி ரூபாவில் மன்னார் நகர அபிவிருத்தி இடம்பெறவுள்ள நிலையில், எப்படியான அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தலாம் என்பது பற்றி ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்றுத் திங்கட்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.
மன்னார் நகர சபைச் செயலர் எக்ஸ்.எல்.றெனால்ட் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், நகர சபை உப தலைவர், உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட பொறியியலாளர் சங்க பிரதிநிதிகள், நகர திட்டமிடல் அதிகார சபையினர் உள்ளடங்கலாக அழைக்கப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
சந்தைக் கட்டடத் தொகுதி அமைத்தல், வாகன தரிப்பிடம் அமைத்தல், கடைத்தொகுதி அமைத்தல் உள்ளிட்ட மூன்று அபிவிருத்தித் திட்டங்கள்தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. அவை பற்றிய ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.
இதேவேளை, மன்னாரில் முன்னெடுக்கப்பட்ட வடிகான் அமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் மன்னார் மாவட்ட பொறியியலாளர் சங்கம்மேற்கொண்ட ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதோடு, எதிர்காலத்தில் மேற்கொளஎவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான தமது ஆலோசனைகளையும் முன்வைத்தனர். (கு-56)

# ஓட்டோ பதிவு செய்யும் நடவடிக்கை மன்னாரில்



மன்னார், டிசெ. 24
மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து முச்சக்கர வண்டிகளையும் பாதுகாப்புப் பரிசோதனைக்கு உட்படுத்தி பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கை மன்னார் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க தலைமையில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
நாடு முழுவதும் பாதுகாப்பைப் பலப்படுத்தும் விதமாக பொலிஸ் திணைக்களத்தின் அறிவித்தலின் படி பாவனையில் உள்ள முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வதுடன் புதிய பதிவு இலக்கம் வழங்கப்பட்டு அடிப்படைப் பாதுகாப்புத் தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுவருகின்றன.
குறித்து செயற்றிட்டத்தின் முதற் கட்டமாக மன்னார் நகர் பகுதிகளில் தொழில் ரீதியாக பாவனையில் உள்ள சுமார் 100க்கும் மேற்பட்ட முச்சக்கர வண்டிகளுக்கு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பதிவு இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டம் முழுவதும் உள்ள சகல முச்சக்கர வண்டிகளும் இவ்வாறு பதிவு செய்யப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (கு-56)

# களை கட்டுகின்றது கிறிஸ்மஸ் விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ.24
யாழ்ப்பாணம் நகரத்தில் கிறிஸ்மஸ் பருவகால விற்பனை களை கட்டியுள்ளது.
பாலன் பிறப்புக்கான தொட்டில்கள், சவுக்கு மரம் என்பன யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இருந்து பஸ்தியன் சந்தி வரை பல இடங்களில் விற்பனை செய்யப்படுவதைக் காண முடிகின்றது.
அவற்றைக் கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை, சவுக்கு மரங்கள் வடமராட்சி, மணற்பாட்டுப் பகுதியில் இருந்து அந்தப் பகுதி அமைப்புக்களுக்குப் பணம் செலுத்திக் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர். (எ-105)



# மடு சென்றார் டி.ஐ.ஜி

மன்னார், டிசெ. 24
வன்னி மாவட்டத்தில் கடமையேற்ற புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரோஹன் ஜே.சில்வா, மன்னார் மடு திருத்தலத்துக்குச் சென்றார்.
நேற்றுமுன்தினம் அங்கு சென்ற அவர், மடுவில் வழிபாடு செய்தார். மடு திருத்தலப் பரிபாலகருடன் கலந்துரையாடினார்.
அவருடன் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பாண்டுல வீரசிங்க உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளும் சென்றிருந்தனர். (கு-56)

உ
சிவமயம்

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

கடந்த **25.11.2019** திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## அமரர் திருமதி
## பாலச்சந்திரன் சீதாலட்சுமி



அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நாளை **(25.12.2019)** புதன்கிழமை பகல் **11.30** மணியளவில் ஏழாலை மேற்கு, **முத்தமிழ் மன்ற கலாசார மண்டபத்தில்** நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விழிசிட்டி,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்
பா.கஜதீபன்
(முன்னாள் மாகாண சபை உறுப்பினர்)

---

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லையா சின்னாச்சிப்பிள்ளை



யாழ்ப்பாணம், கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா சின்னாச்சிப்பிள்ளை 22.12.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கரணவாயைச் சேர்ந்த திரு.திருமதி கந்தையா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையாவின் பாசமிகு மனைவியும், சியாமளா, சிவசுப்பிரமணியம் (சுவிஸ்), மங்கையர் திலகம் (ஆசிரியை, யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னலிங்கம் (சின்னவன்), கோமதி (சுவிஸ்), காலஞ்சென்ற பரமானந்தம் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரணவன், விதுசனா, ரேணுகா, ரெனோகாந், ரிசான், ஆதவன், அபிராம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2019) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/30130)(11,17)

தகவல்: குடும்பத்தினர்.

077 954 4161, 077 951 3827

---

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி கந்தையா



கைதடி நுணாவில், சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கந்தையா நேற்று **(23.12.2019)** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அன்னம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற நாகலிங்கம் கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, நமசிவாயம், பரமசிவம், மனோன்மணி, சுப்பிரமணியம் மற்றும் நடராஜன் (லண்டன்), காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணிகுமாரசிங்கம், சந்திரபாலன், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் செல்வமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(24.12.2019)** செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் **12.00** மணியளவில் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.


CS24225(16/17)

தகவல்:
குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்

## செல்லையா வெற்றிவேல்



பிறப்பு 28.10.1956 — இறப்பு 23.12.2019

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா வெற்றிவேல் நேற்று (23.12.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தணிகாசலம், இராசம்மா தம்பதிகளின் மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், ஜெயந்தன் (பிரான்ஸ்), நிறா-குலன், மதிராஜ், நிஷாந்தினி, சுதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரகுதரனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் தவமணி, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கௌரிதேவி, மாணிக்கவாசகர், வேதாச்சலம், வசந்தாதேவி, கருணாசலம், கங்காதரன், விமலாதேவி, மஞ்சுளாதேவி காலஞ்சென்ற உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (24.12.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அளவெட்டி கொட்டுப்பனை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(CS/30125)(11,17)

தகவல் :
குடும்பத்தினர்.

---

ஓம் விராட்விஸ்வப்பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை காண்டீபன் (காண்டி)

(கிரிசன் வெள்ளிரும்புத் தொழிலகம்)



பிறப்பு 28.10.1983 — இறப்பு 20-12-2019

யாழ். மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை காண்டீபன் (காண்டி) கடந்த (20-12-2019) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற பொன்னுத்துரை, மற்றும் சறோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மகனும், பேரம்பலம் அரியராணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுபத்திரா அவர்களின் பாசமிகு கணவரும், சக்திகிரிஷன், சபரிகிரிஷன், டக்சாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரமேஸ்வரன் (கனடா), காலஞ்சென்றவர்களான கருணாகரன் (சுரேஷ் -கனடா), காஞ்சனாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுகன்ஜா (கனடா), பிரதீபா (கனடா), ரகுலேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வைஷ்னவி (லண்டன்), காலஞ்சென்ற தட்சானவி ஆகியோரின் ஆசை மாமாவும் ,சுவேதன், வாசணா, லபீசன், கெனீஷா(கனடா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ,பாலசந்திரன் - கருணாநிதி (பிரான்ஸ்), சிவநேசன் - பாமா (சுவிஸ்), யோகராஜா (தேவன்) - ஜெயசோதி (ஜெயா-ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மருமகனும் , சந்திரதாஸ் (கனடா), பவநீதன், பஜீனா, ஜெஸ்மினா (ஜேர்மனி), கர்மிஷா, கர்ஷன், கர்மிலன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மச்சானும், சுமித்திரா, செயோன், மலரவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (24-12-2019) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று மல்லாகம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


மில் ஒழுங்கை, மல்லாகம்

தகவல்: குடும்பத்தினர்
077 279 7119

---

# மரண அறிவித்தல்

பிறப்பு
30
-
07
-
1937



இறப்பு
21
-
12
-
2019

## தம்பு பொன்னம்பலம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பொன்னம்பலம் அவர்கள் கடந்த (21.12.2019) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சரஸ்வதி தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் ஞானகமலாம்பிகையின் பாசமிகு கணவரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

114/7, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

தகவல் : குடும்பத்தினர்
077 666 9987 கணேஸ்வரன் (மருமகன்)
076 669 5616 தயானந்தன் (மருமகன்)




உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ் International Rank 33

இலங்கையில் அங்கீகாரம் கொண்டது University Grants Commission (UGC)

தொழிற்பயிற்சியை உள்ளடக்கியது TRAINING

சான்று அங்கீகாரம் பெற்றது TVEC Approved Certificate

சர்வதேச தரத்திலான விரிவுரையாளர்களை கொண்டது

நவீன ஆய்வுகூட வசதிகள்

தங்குமிட வசதிகள் மற்றும் உணவகம்.

நிறுவப்பட்ட கல்விப் பீடம்

## BUSiNESS MANAGEMENT | முகாமைத்துவ கற்கைபீடம்

### BBM Hons, HND BM

- BUSINESS MANAGEMENT
- BUSINESS MARKETING
- HUMAN RESOURCE MANAGEMENT
- BANKING AND FINANCE

முகாமைத்துவப் பட்டப்படிப்பு கற்கைநெறிகள்:

- வியாபார முகாமைத்துவம்
- சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
- மனிதவள முகாமைத்துவம்
- நிதி மற்றும் வங்கியியல்

## IT | கணணியியல், தகவல் தொழில்நுட்ப கற்கைபீடம்

### BSc Hons. Information Technology, HND

- BIT- BACHELOR OF INFORMATION TECHNOLOGY
- CYBER SECURITY
- SOFTWARE ENGINEERING

தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு கற்கைநெறிகள்:

- தகவல் தொழில்நுட்பம்
- இலத்திரனியல் பாதுகாப்பு
- மென்பொருள் கட்டுமானம்

## ARTS | அழகியல் கற்கை பீடம்

### BA Hons, HND

- BACHELOR OF EDUCATION
- BACHELOR OF PSYCHOLOGY
- BACHELOR OF ARTS IN MASS COMMUNICATION (HONS)

அழகியல் பட்டப்படிப்பு கற்கைநெறிகள்:

- கல்வி இளங்கலைமானி
- உளவியல் இளங்கலைமானி
- வெகுஜன தொடர்பாடல்

## SCHOOL OF ENGINEERING | பொறியியல் கற்கைபீடம்

### BSc Hons. Eng.

- CIVIL ENGINEERING
- QUANTITY SURVEYING

பொறியியல் பட்டப்படிப்பு கற்கைநெறிகள்:

- குடிமுறை பொறியியல்
- அளவு கணக்கெடுப்பு

**ஐக்கிய இராச்சியத்தை சேர்ந்த Chichester பல்கலைக்கழகம் இலங்கை மாணவர்களுக்கு வழங்கும் பட்டப்படிப்புக்கான புலமைப்பரிசில்**

- ✓ நுழைவு பரீட்சையில் பெறும் புள்ளிகளுக்கு ஏற்ப 75% வரையான புலமைப்பரிசில்.
- ✓ இறுதியாண்டு படிப்பை ஐக்கிய இராச்சியத்தில் உள்ள **Chichester** பல்கலைக்கழகத்தில் தொடரக் கூடிய வாய்ப்பு.
- ✓ 06 மாதங்கள் சம்பளத்துடன் கூடிய வெளிக்களப் பயிற்சி
- ✓ இலங்கை பல்கலைக்கழக ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிநெறிகள்.
- ✓ பட்டப்பின்படிப்பையும் கலாநிதி படிப்பையும் இலங்கையில் அல்லது ஐக்கிய இராச்சியத்தில் தொடரக் கூடிய வாய்ப்பு.

**இலகுதவணை கல்விக் கடன் திட்டங்கள்**

இலகுவான முறையில் பெற்றுக்கொள்ளக்கூடிய கல்விக் கடன்கள்

SEYLAN BANK PLC | NDB bank

**நுழைவு பரீட்சைக்கு அனுமதியை பெற்றுக்கொள்ள அழையுங்கள்**

**021 437 4443**

**https://www.chi.ac.uk/**

**dean@blccampus.edu.lk**

**2020 கல்வியாண்டுக்கான உள்வாங்கல் பதிவுகளுக்கு 021 437 4443**

# ஆறாத் துயரிலும் அனைவருக்கும் நன்றி நவிலல்



12.10.2019 அன்று மரணமடைந்த

**அமரர்**

## புஷ்கலாம்பாள் மகேஸ்வரக்குருக்கள்

அவர்களின் இறுதிக்கிரியைகளின் போது துயர் பகிர்ந்த தென்மராட்சிப் பிரதேச கிராம மக்களுக்கும், சரசாலை பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம், இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயம், நுணுவில் குளக்கோட்டு விநாயகர் ஆலயம், கரவெட்டி மித்தில் ஞானவைரவர் ஆலயம் சார்ந்த மக்களுக்கும், யாழ். வலிகாம மக்களுக்கும், மாசார் திரியாய், கண்டாவளை, புளியம்பொக்கணை அன்பு உள்ளங்கட்கும் வடமராட்சி துன்னாலை வல்லியானந்தம், சோழியவத்தை, அல்லையம்பதி கிராம மக்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள், நினைவுப் பதாகைகள் வெளியிட்டவர்களுக்கும், சர்வதேச நாடுகளில் இருந்து முகநூல் மூலம் அஞ்சலி தெரிவித்தோர், மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தோர் அனைவர்க்கும் நெஞ்சக் குமுறலுடன் இதயம் கனிந்த நன்றிகள்.

முக்கியமாக இறுதிக் கிரியைகளில் கூடிய பங்களிப்பு வழங்கிய சரசாலை வாழ் மக்கள், இளைஞர்களுக்கும், சாரதாபீடத்தில் இருந்து தியான்காடு இடுகாடு வரை இறுதி ஊர்வல ஏற்பாடுகளை மேற்கொண்ட அல்லையம்பதி இளைஞர்களுக்கும், ஆத்மசாந்திக் கிரியைகளை சிறப்புற நடாத்தி வைத்த கொட்டைக்காடு சிவஸ்ரீ ரவீந்திரக்குருக்களுக்கும், சுகயீன வேளையில் யாழ் போதனாவைத்தியசாலையில் இருந்த போது ஆதரவு வழங்கிய வைத்தியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும், நினைவு மலரினை பதிப்பித்துத் தந்த மயூரா தொலைத் தொடர்பகத்தினருக்கும், அந்திமக் கிரியைகளின் போதும், இறுதிக் கிரியைகளின் போதும் வாகன வசதிகள் வழங்கியவர்களுக்கும் மேலும் யாரையும் குறிப்பிடாது விட்டால் அதை மன்னித்து ஏற்றுக்கொள்பவர்களுக்கும் எமது உள்ளக் குமுறலோடு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அன்னாரது சரசாலை இல்லத்தில் இன்று (24.12.2019) செவ்வாய்க்கிழமை நடைபெறும். அனைவரையும் கலந்து பிரார்த்தித்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

IN 12049/15/17


**துயரில் துயருறும்**

சரசாலை
சிதம்பர விநாயகர் கோவிலடி.

குடும்பத்தினர்
ந.மகேஸ்வரக்குருக்கள் (ஈசன் ஐயா)
சுதாகரசர்மா வித்தியா ராம் சகோதரர்கள், சாரதாபீடம்

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 09 . 1935



மறைவு
22 . 12 . 2019

## திருமதி தில்லையம்பலம் அன்னபூரணம் (பேபி)

நவாலி ரங்கூன் இல்லத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்தவருமாகிய தில்லையம்பலம் அன்னபூரணம் அவர்கள் 22.12.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ரங்கூன் கந்தையா கண்மணி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை கண்மணி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தில்லையம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் சிவகுமார் (வாகன வர்த்தகர் - நவாலி, கோண்டாவில்), சிறிகுமார் (சுவிஸ்), யசோதா (ஆசிரியை, வவுனியா விபுலானந்தாக் கல்லூரி), உதயகுமார் (சேகர் - வாகன வர்த்தகர்- வவுனியா), நந்தகுமார் (சுவிஸ்), வசந்தகுமார் (பிரான்ஸ்), செந்தில்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி (சுமதி), சக்திதேவி (சுவிஸ்), சுந்தரலிங்கம் (உயிரியல் விஞ்ஞானத்துறை – வவுனியா வளாகம்), மேரி ஆனந்தி (ஜெயந்திநகர் - கிளிநொச்சி), இளமதி (சுவிஸ்), ஜெனட் நிரஞ்சினி (பிரான்ஸ்), சத்தியப்பிரியா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிரியங்கா சஜிகாந் (லண்டன்), துக்ஷியங்கா கோபிநாத் (ஆசிரியை, யா/ ஊர். சென் மேரிஸ்), அனுலா (D.O- வேலணை மத்திய கல்லூரி), திலக்சன் (T.O- மன்னார் கல்வி திணைக்களம்), அபினயா (ஆசிரியை, 'சிமாட் கிட்ஸ் - திருநெல்வேலி), ஜதுர்க்ஷனா (யா/ வேம்படி மகளிர் கல்லூரி - 2018), ஜெயவாகினி (மருத்துவப் பீடம் K.D.U ), தர்ஜான் (வ/தமிழ் மத்திய மகாவித்தியாலயம் - 2018), நிதர்ஸ்னா (வணிகபீடம் - யாழ் பல்கலைக்கழகம்), கிருக்ஷாந் (Civil Engineering Technology - மொறட்டுவ), லதுர்க்ஷனா (வ/ இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), திருக்ஷன், அனுக்ஷன்(சுவிஸ்), நிவேதா, நிக்கோலா, திவ்யன் (பிரான்ஸ்), அதிக்ஷா, தனிக்ஷா, ஜனிக்ஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் லவின் அரிக் (லண்டன்) இன் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான தவமணி, மனோன்மணி, சிலோன்மணி, ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2019) புதன்கிழமை காலை 8 மணியளவில் வவுனியா வேப்பங்குளம் 6ஆம் ஒழுங்கையிலுள்ள உதயகுமார் (சேகர்) இல்லத்தில் நடைபெற்று காலை 9.30மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக யாழ்ப்பாணம் நவாலி வழுக்கையாறு ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6 ஆம் ஒழுங்கை,**
**வேப்பங்குளம், வவுனியா**

**தகவல்**
**குடும்பத்தினர்**

**0777242381, 0777112250**

# மரண அறிவித்தல்

## இராசையா பரமேஸ்வரி (சின்னமணி)

**பிறப்பு**
**03.06.1940**

**இறப்பு**
**22.12.2019**



ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் கோட்டைக்காடு மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட இராசையா பரமேஸ்வரி (சின்னமணி) 22.12.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளையர் இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வெள்ளையர் - குட்டி தம்பதிகளின் மருமகளும் தவமணி, சீவரட்ணம், சிவலோகம், சின்னராசா, சிவனொளிபாதம், நேசமலர், யோகராணி, தங்கரட்ணம், தர்மலிங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான குண்டுமணி, சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகேஸ்வரி, காலஞ்சென்ற உதயமனோகரன் மற்றும் சாரதா, திருஞானவதி, புஸ்பலதா, விஜயகுமார், சுஜாதா, சசிகுமார், கவிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் குணலிங்கம், சாந்தகுமாரி, செல்வராசா, பாஸ்கரன், சாந்தலிங்கம், கார்த்திகா, முருகமூர்த்தி, இராஜேஸ்வரி, சதீசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சாமினி, குணதீபன், குணசீலன், நிஷாந்தினி, அருள்குமரன், செந்தில்குமரன், செந்தூரன், செந்றோஜி, தினோஜி, செல்வஜெனோஜி, அனோஜா, மதனகோபி, விஜிவர்ணன், நிலானி, கபீர்த்தனா, அக்ஷிகா, கன்சிகா, அர்ணிஷ், கிருஷன்னா, கிருஷாலினி, சபீனா, தமிழினி, கனிஷா, அஜீஸ், அஸ்வதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தொந்தனை கட்டுப்பிட்டி இந்துமயானத்துக்கு நண்பகல் 12.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோட்டைக்காடு,**
**மல்லாகம்.**

(CS 29058)
(14.17)

**தகவல் :**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

**077 357 6847/ 077 750 3826**




# ஆபத்தை உணர்வார்களா?

ந.லோகதயாளன்

வவுனியா வடக்குப் பிரதேச சபை தமிழர்களின் எல்லைப் பகுதி. இந்தச் சபையின் 26 உறுப்பினர்களில் 10 பேர் சிங்களப் பிரதிநிதிகள். தமிழ்ப் பிரதிநிதிகள் பிளவுண்டு இருக்கின்றமையால் தவிசாளர் பதவி சிங்கள உறுப்பினரின் கைக்குச் செல்லும் ஆபத்து இருக்கின்றது'

உள்ளூராட்சி சபைகளின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டங்கள் பல இடங்களில் தோற்கடிக்கப்படுகின்றன. வவுனியா வடக்கு பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமாக இருந்தால் தமிழர்களின் இருப்புக் கேள்விக்குறியாக மாறும் ஆபத்தை, தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் உணராமல் இருக்கின்றன.

கலப்புத் தேர்தல் முறையின் கீழ் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்றது. பல சபைகளில் தொங்கு ஆட்சியே அமைந்தது. எந்தவொரு தரப்பும் தனித்து ஆட்சி அமைக்க முடியாத சூழல் ஏற்பட்டது.

உள்ளூராட்சி சபைகளில் முதல் இரண்டு ஆண்டுகளும் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் அதனைத் தவிசாளர் தனக்குரிய சட்ட உரித்துக்கு அமைவாக நிறைவேறியதாக அறிவிக்கலாம்.

அவ்வாறு அனைவருமே எதிர்த்து வாக்களித்தாலும், 14ஆம் நாள் மீண்டும் சபைக்கு வரும்போதும் எதிர்த்து வாக்களிப்பினும் அதே வரவு - செலவுத் திட்டம் முழுமையாக தவிசாளரால் நிறைவேற்றப்படும் அதிகாரம் உள்ளது.

ஆனால் 2020ஆம் ஆண்டின் இறுதியில் சபைகளில் 2021ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்போது அது தோற்கடிக்கப்படுமானால் முதல்வர் அல்லது தவிசாளர் பதவி இழப்பார் என உள்ளூராட்சி கட்டளைச் சட்டம் தெளிவாகக் கூறுகின்றது. வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சிச் சபைகளில் 5 சபைகள் மட்டுமே அறுதிப் பெரும்பான்மையில் அமைக்கப்பட்டவை. எஞ்சியவை தொங்கு சபைகளாகவே காணப்படுகின்றன. இதற்கு உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முறைமை வித்திட்டது.

வடக்கு மாகாணத்தில் வவுனியா வடக்குப் பிரதேச சபை ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இந்தச் சபையானது எல்லைப் பகுதித் தமிழர்களின் இருப்பை வெளிப்படுத்துகின்றது. இதனைப் பலரும் மறக்கின்றனர். 2020ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டங்கள், 2021ஆம் ஆண்டுக்கான நாடிபிடித்தலாகவே அமையும் நிலையில், நெடுங்கேணி அதாவது வவுனியா வடக்கு பிரதேச சபையில் 2020ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது 7 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்ட நிலையில் 17 வாக்குகள் எதிராக அளிக்கப்பட்டன.

வவுனியா வடக்கு பிரதேச சபையில் 26 உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 8 உறுப்பினர்கள் உள்ளனர். சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் 5 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் சார்பில் தலா மூவரும் சுயேச்சை சார்பு உறுப்பினர் இருவரும் உள்ளனர். இங்கே ஏனைய சபைகள் போன்று 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமும் தோற்கடிக்கப்படுமானால் புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றே ஆக வேண்டும்.

இதன்போது தமிழ்க் கட்சிகள் பிரிந்து நின்றாலோ அல்லது நடு நிலைமை என்று வாக்களிக்காது இருந்தாலோ சபையே பெரும்பான்மை இனத்தவர்களின் கைக்குச் செல்லும் அவலம் ஏற்படும். சபை உறுப்பினர்களில் 10பேர் பெரும்பான்மை இனத்தவர்கள்.

வவுனியா மாவட்ட தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சருமான ப.சத்தியலிங்கம் இரண்டு ஆண்டுகளின் முன்பே இந்த நிலைமையை எடுத்தியம்பியிருந்தார். வவுனியா வடக்குப் பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டுள்ள நான்கு வட்டாரங்களை மணலாறு (வெலிஓயா) பிரதேச சபையுடன் இணைக்குமாறு உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை மீள் நிர்ணயக்குழுவின் தலைவரிடம் 2017ஆம் ஆண்டு ப.சத்தியலிங்கம் எழுத்தில் கோரிக்கை விடுத்தார்.

அதிலே கலாபோகஸ்வெவை அண்டிய குடியேற்றக் கிராமங்களான 17 கிராமங்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் நேரடியாக நிலத்தொடர்பு அற்றவையாகும். இந்தக் கிராமங்களை உள்ளடக்கியதான 4 வட்டாரங்கள் உள்ளூராட்சித் தேர்தலின்போது வவுனியா வடக்கு பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது பிரதேச செயலக சேவைகளை மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலகத்திலிருந்தே பெற்று வருகின்றனர். ஆனால் 2017ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்ட வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இவர்களின் பெயர்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாரம்பரிய தமிழ் கிராம சேவையாளர் பிரிவுகளான வெடிவைத்தகல்லு மற்றும் பட்டிக்குடியிருப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த மக்கள் தமது சுகாதார சேவைகளை முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலும், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கான சேவைகளை வவுனியா தெற்கு சிங்களப் பிரிவிலுள்ள பணிமனையிலும், மின்சார, தொலைபேசி சேவைகளை அனுராதபுர மாவட்டத்திலிருந்தும் பெற்று வருகின்றார்கள். வவுனியா வடக்கு பிரதேச செயலக, பிரதேச சபைக்குரிய சேவைகளைப் பெறும்பொருட்டு 75 கிலோ மீற்றர் காட்டுவழியால் இவர்கள் பயணிக்கின்றார்கள். கடந்த 2015ஆம் ஆண்டு வவுனியா வடக்கு பிரதேச சபையின் 47ஆவது அமர்வில் மேற்படி வட்டாரங்களை சேர்ந்த 4 உறுப்பினர்கள் தாங்கள் வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆளுகையிலிருந்து விடுபடகோரி முன்வைக்கப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. மாகாணசபை அமர்வில் இது தொடர்பாக சத்தியலிங்கத்தால் முன்வைக்கப்பட்ட பிரேரணை சபையால் அங்கீகரிக்கப்பட்டு மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தற்போது மணலாறு (வெலிஓயா) பிரதேசத்திற்கு தனியான பிரதேச செயலகம் நிறுவப்பட்டுள்ள நிலையில் மேற்படி நான்கு வட்டாரங்களைச் சேர்ந்த 17 கிராமத்தைச் சேர்ந்த மக்களையும் அவர்களின் விருப்பத்துக்கேற்றவாறு மணலாறு (வெலிஓயா) பிரதேச சபையுடன் இணைப்பதற்கு அல்லது வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இவற்றை தமிழ் அரசியல் கட்சிகள் கவனத்தில் எடுத்து கட்சி அரசியலா? தமிழ்மக்களின் இருப்பா? என்பதனைத் தீர்மானிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அவ்வாறின்றி இங்கும் கட்சி பேதம் பார்த்து சபை பறிபோகுமாக இருந்தால் எதிர்த்தோ, அல்லது நடு நிலை என்னும் பெயரில் செயல்படுபவர்கள் தமிழ் மக்களின் இருப்புக்காக பாடுபடுகின்றோம் என்றால் அதனை விட ஒரு பொய் இருக்கவே இருக்காது.

“

வடக்கு மாகாணத்தில் வவுனியா வடக்கு பிரதேச சபை ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இந்தச் சபையானது எல்லைப் பகுதி தமிழர்களின் இருப்பை வெளிப்படுத்துகின்றது. இதனைப் பலரும் மறக்கின்றனர். 2020ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டங்கள், 2021ஆம் ஆண்டுக்கான நாடிபிடித்தலாகவே அமையும் நிலையில், நெடுங்கேணி அதாவது வவுனியா வடக்கு பிரதேச சபையில் 2020ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது 7 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்ட நிலையில் 17 வாக்குகள் எதிராக அளிக்கப்பட்டன.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாட்டின் நலனுக்காக சிந்திப்பார்களா?

தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தொடர்பாக கோத்தாபய ராஜபக்ஷ அரசு வெளிப்படுத்திவரும் கருத்துக்கள் நாடு மீண்டும் பின்னோக்கி இருண்ட யுகத்துக்குச் செல்லுமா என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

இலங்கையில் நிலவும் நீண்டகாலப் பிரச்சினையான இனப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் கடந்த அரசு புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் ஈடுபட்டது. ஆனால் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் அந்த முயற்சி இனித் தொடராது என்ற நிலையை அடைந்துள்ளது.

புதிதாகப் பதவியேற்றுள்ள கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு அதிகாரப் பரவலாக்கம் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கத்தில் இல்லை என்பது அவர் வெளிப்படுத்திவரும் கருத்துக்கள் மூலமும், அவரது அமைச்சர்கள் வெளிப்படுத்திவரும் கருத்துக்கள் மூலமும் வெளிப்படையாகத் தெரிகின்றது.

தமிழ் மக்களின் ஆகக் குறைந்த கோரிக்கையான 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றும் யோசனையைக் கூட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ முற்றாக நிராகரித்துள்ளார். அபிவிருத்தி ஊடாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று அவர் கொண்டிருக்கும் நிலைப்பாடு தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அவர் எந்தளவு புரிந்துணர்வோடு இருக்கின்றார் என்பதை வெளிக்காட்டுகின்றது.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் தங்கள் உரிமைக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு சர்வதேச அழுத்தங்களை நம்பியிருந்தனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையூடாக இலங்கை அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டாலும் சில நன்மைகள் கிடைத்தன என்பதை மறுப்பதற்கில்லை.

தற்போது இலங்கையில் ஆட்சி மாற்றம் நடந்துள்ள நிலையில் கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இனி ஏற்கப் போவதில்லை என்ற கருத்துக்களை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தக் கருத்துக்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன.

இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒருபோதும் இந்த அரசு ஏற்காது என்று நீதி, மனித உரிமைகள், சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

நாட்டில் புரையோடிப் போயுள்ள நீண்ட கால இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாது நாட்டை அபிவிருத்தியில் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளைக் கைவிட்டு, சர்வதேசத்தைப் புறந்தள்ளி அரசு செயற்படுமானால் நாடு மீண்டும் இருண்ட யுகத்துக்குள் செல்வதைத் தவிர்க்க முடியாது. கடந்த காலத்தில் நடந்த அவ்வாறான செயல்களே நாட்டில் அராஜகங்கள் ஏற்படக் காரணமாக இருந்தன என்பதை கருத்தில் கொண்டு ஆட்சியாளர்கள் தங்கள் அரசியல் ஆதாயங்களுக்காகவும், தனிப்பட்ட நலன்களுக்காகவும் செயற்படாது நாட்டுக்காகவும் மக்களுக்காவும் செயற்படமுன் வரவேண்டும்.

# 2,945 வீடுகளுக்குரிய நிதி இதுவரை இல்லை

யாழ்ப்பாணம்,டிசெ.24
யாழ்ப்பாணம் குடாநாட்டுக்கு 2020ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 945 வீடுகளின் கட்டுமானத்துக்குரிய 445 மில்லியன் ரூபா நிதி இதுவரை கிடைக்கவில்லை என்று யாழ்.மாவட்ட மேலதிக செயலர் (காணி) தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது, தற்போது 19 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் தேவை. இதில் உச்ச பட்சமாக தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்கு மட்டும் 3 ஆயிரம் வீடுகள் தேவை. அடுத்தபடியாக சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு முக்கியம்பெறுகின்றது. இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஆயிரம் வீடுகளும், அடுத்த கட்டமாக ஆயிரத்து 500 வீடுகளும் அனுமதிக்கப்பட்டன. இதில் ஆயிரம் வீடுகளும் முழுமையாக நிறைவுற்றுள்ளன. அதேபோன்று ஆயிரத்து 500 வீடுகளும் முடிவுறுத்தப்படும் நிலையில், 450 வீடுகளுக்கான பணிகள் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளன. இதற்கு முக்கிய காரணம் நிதி கிடைக்கவில்லை. அதேநேரம் மாவட்டத்தில் உள்ள வீட்டுத் தேவையுடையவர்கள், பட்டியலில் முன்னாள் போராளிகள் ஆயிரத்து 400 பேர் உள்ளனர். என்றார். (க-105,111)

## இரணைமடுத் திட்டம் மீண்டும் இழுபறியில்

யாழ்ப்பாணம், டிசெ. 24
இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர்கொண்டு வருவது தொடர்பில் மீண்டும் அதிகாரிகளிடையே சலசலப்பு ஏற்பட்டது.
யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பான விடயங்கள் ஆராயப்பட்டன. 'குடாநாட்டு நீர் வழங்கலுக்காக இரணைமடுக் குளம் 2 அடி உயர்த்தப்பட்டது. இருப்பினும் அதன் பின்னர் ஏறபட்ட அரசியல் கருத்துக்கள், மாகாண சபை மேற்கொள்ளாத தீர்மானத்தை மேற்கொண்டதாக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அறிக்கையிட்டமை போன்ற காரணங்களால் அதில் பல மாற்றம் ஏற்படுத்தப்பட்டு திட்டம் இடம்பெற்றது. தற்போது அந்த மாவட்ட மக்களுக்கு உண்மை நிலைமை புரிய வைக்கப்பட்டுள்ளது' என்று அதன் பொறியியலாளர் தெரிவித்தார்.
'இரணைமடுவில் இருந்து ஆரம்பத்தில் 12 எம்.சி.எல் நீரே நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கோரிய்து. இருப்பினும் அதன் பின்னர் 18 எம்.சி.எல் நீர் வேண்டும் என்று கோரப்பட்டது. கேட்ட அளவான நீரை வடமராட்சியால் இருந்து எம்மால் வழங்க முடியும். இதேபோன்று பாலியாறுத் திட்டம் அனுமதிக்கும் நிலமையை எட்டியுள்ளது. அதில் குறைந்த பட்சம் 12 எம்.சி.எல் நீர் கிடைக்கும் அதேபோன்று குடாநாட்டில் இருந்தும் 7 எம்.சி எல் நீரை பெற முடியும்' என்று நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். வடமராட்சி நீரைப் பெற இன்னமும் 2 ஆண்டுகளுக்கு மேல் காலம் தேவை என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்த போது, இல்லை அது தவறானது அதற்குரிய இயந்திரங்கள் நெதர்லாந்து அரசினால் அன்பளிப்பாக கிடைக்கின்றன. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சார்ந்தவர்களை இணைத்து நடத்தும் கூட்டமொன்றில் இதற்குரிய முடிவு எடுக்கப்படும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (க-105)

### உணவு பொதிகள் வழங்கல்

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவில் உள்ள பண்டாரவன்னியன் கிராமத்தில் மழையால் பாதிக்கப்பட்ட 57 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. முத்துஐயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தால் இந்த உலர்உணவுப் பொதிகள் சங்கத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-500)

## கம்பெரலிய திட்டத்தில் 350 வேலைகள் முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.24
யாழ்.மாவட்டத்தில் நடப்பாண்டில் கல்வித் திணைக்களங்களின் கீழ் மட்டும் 350 க்கும் மேற்பட்ட திட்டங்கள் கிராமிய எழுச்சித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன என்று வலயக் கல்வித் திணைக்களங்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.
யாழ். மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மர்வட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கல்வி சார்ந்த விடயங்கள் ஆராயப்பட்டன.
2019 ஆம் ஆண்டுல் தீவகத்தில் மட்டும் கிராமிய எழுச்சித் திட்டத்தில் 101 திட்டங்களும், யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 57 திட்டங்களும், தென்மராட்சிக்" கல்வி வலயத்தின் கீழ் 54 திட்டங்களும் வடமராட்சிக் கல்வி வலயத்தின் கீழ் 141 திட்டங்களும், வலிகாமம் கல்வி வலயத்தில் 69 திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன என்று திணைக்களத்தினரால் தெரிவிக்கப்பட்டது. (க-105)

## முல்லையில் தொடரும் மழை குளங்களின் நீர் மட்டம் உயர்வு

முல்லைத்தீவு,டிசெ.24
முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், குளங்களின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளது. குளங்கள் வான் பாய்வதுடன், வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
முத்துஐயன் கட்டுகுளம் 24 அடி நீர் தேங்கியுள்ளதுடன் வான்பாய்கின்றது. குளத்தின் நான்கு கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. இரண்டு கதவுகள் 6 அங்குலமும், இரண்டு கதவுகள் 1 அடியும் திறந்து விடப்பட்டுள்ளன.
உடையார்கட்டுக்குளம், கணுக்கேணிகுளம், மடவளசிங்கம்குளம், தண்ணிமுறிப்பு குளம், மருதமடுக்குளம், வவனிக்குளம், தென்னியங்குளம், ஜயன்குளம், பழையமுறிகண்டிகுளம், கோட்டைகட்டியகுளம், கொல்லவிளாங்குளம், மல்லாவிக்குளம் உள்ளிட்ட பெரும் குளங்கள் வான்பாய ஆரம்பித்துள்ளன என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதேவேளை மழை தொடர்ந்தால் பல ஏக்கர் விவசாய நிலைங்கள் முற்று முழுதாக கைவிட வேண்டிய நிலமைக்குத் தள்ளப்படும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (க-ரி3)

# அடக்குமுறை தொடருவது நாட்டுக்கு நல்ல விடயமல்ல!

இந்துமதி

நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து எதிர்க் கட்சியினரை அடக்குவதற்கு தற்போதைய அரசு முற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரொருவர் கூறியமை கருத்தில் கொள்ளத் தக்கது.



முன்னாள் அமைச்சரான சம்பிக்க ரணவக்கவின் கைது தெற்கில் எதிர்ப்புக்களைத் தோற்றுவித்துள்ளது. முடிந்துபோன ஒரு விடயத்தைத் தூசி தட்டி சம்பிக்கவைக் கைது செய்துள்ளமை திட்டமிட்ட அரசியல் பழிவாங்கலெனப் பலரும் விமர்சித்துள்ளனர். ஒரு நாடாளுமன்ற உறுப்பினரான அவரை நாடாளுமன்ற சம்பிரதாயங்களைப் புறம்தள்ளிவிட்டுக் கைது செய்துள்ளனர் என சபாநாயகரின் அலுவலகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரொருவரைக் கைது செய்வதாக இருந்தால் சபாநாயகருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பது இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால் சம்பிக்க விடயத்தில் அது மீறப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஒரு நாட்டின் ஜனநாயகம் சீராக நிலைநிறுத்தப்படுவதற்கு அந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் அளப்பரிய பங்கை வகிக்கின்றன. தட்டிக் கேட்பதற்கு எவருமே இல்லாதுவிட்டால் ஆளும் தரப்பினர் தமது எண்ணம் போன்று நடந்துவிடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுவிடும் ஆகவே ஆளும் கட்சியினர் எதிர்க் கட்சியினரைப் பழிவாங்கம் நோக்குடன் செயற்படுகின்றமை ஜனநாயகத்தையே அழித்துவிடும்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 14 இலட்சம் அதிகப்படியான வாக்குகளால் கோத்தாபய வெற்றிபெற்றிருந்தார். இதேவேளை சஜித் பிரேமதாசவுக்குச் சுமார் 55 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. இதன் மூலமாக 55 இலட்சம் பேரின் ஆதரவு அவருக்குக் கிடைத்துள்ளமை நிரூபணமாகின்றது. இதை ஜனாதிபதியும் அரசும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. ஏனென்றால் நாடு முழுவதும் 55 இலட்சம் மக்களின் ஆதரவைப் பெற்ற எதிர்க் கட்சியே தற்போது நாட்டில் உள்ளது.

### நீதித்துறை சுயாதீனமாக இயங்குதல் வேண்டும்


நீதித்துறை சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் இயங்கும்போதுதான் மக்கள் நீதியை எதிர்பார்க்க முடியும். இல்லாது விட்டால் சட்டத்தின் ஆட்சியை எதிர்பார்க்க முடியாது. சர்வாதிகார ஆட்சியின் கீழ் மக்கள் அல்லல் படவே நேரிடும். அது மட்டுமல்லாது நீதிக்கு முன்னால் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பேதமும் கிடையாது. நீதியின் முன்னால் சகலருமே சமமானவர்கள்.

இந்த நாட்டின் அரசமைப்பு ஒரு விடயத்தைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. ஜனாதிபதியை நீதித்துறையால் கட்டுப்படுத்த முடியாது என்பதுதான் அது. எந்த நீதிமன்றத்தினும் அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கவும் முடியாது. அது மட்டுமல்லாது நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை பெற்றவர்களைத் தமது விசேட அதிகாரங்கள் மூலமாக விடுவிக்கவும் ஜனாதிபதியால் முடியும். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொலைக் குற்றவாளி ஒருவரைத் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி விடுவித்தமை பெரும் சர்ச்சையையே ஏற்படுத்தி விட்டது.

எதிர்காலத்திலும் இவ்வாறான செயல்கள் இடம்பெறா என்பதற்கு எந்த விதமான உத்தரவாதத்தையும் வழங்க முடியவில்லை. ஜனநாயகம் என்பது வாக்குகளின் எண்ணிக்கையால் தீர்மானிக்கப்படக் கூடியதல்ல. எமது நாட்டைப் பொறுத்தவரையில் நாடாளுமன்றமும், ஜனாதிபதியும் வாக்குகளின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுகின்றமையைக் காண முடிகின்றது. இது ஜனநாயகத்தின் பிரதான அங்கமாக உள்ளபோதிலும் குறைபாடுகள் பலவற்றைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தேர்தல்கள் நேர்மையான வகையில் இடம்பெறுமாயின் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆனால் வாக்காளர்களை மிரட்டி வாக்குச் சேகரிப்பதையும், வாக்களிக்க விடாமல் தடுப்பதும், இனவாதப் பரப்புரைகளை மேற்கொண்டு வாக்காளர்களைத் திசை திருப்புவதும் பணத்தைக் கொடுத்து வாக்குச் சேகரிப்பதும் வாக்களிப்பின் கௌரவத்தையே பாதித்துவிடுகின்றன.

இவ்வாறான நிலையில் சேகரிக்கப்படும் வாக்குகள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர்கள் தொடர்பாகச் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்பட்ட தவறான இனவாதக் கருத்துக்களே சஜித் பிரேமதாசவின் தோல்விக்குக் காரணமாக அமைந்து விட்டன. ஆகவே இந்தத் தேர்தல் முடிவை ஜனநாயக ரீதியான ஒன்றென ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் கோத்தாபயவின் வெற்றியை எவராலும் தடுக்க முடியவில்லை. இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் வாக்களிப்புத் தொடர்பான அவநம்பிக்கையைத் தவிர்க்க முடியாது.



### இராணுவ ஆட்சியா இங்குள்ளது?

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன் தெரிவித்த கருத்தொன்று முக்கியத்துவம் பெறுகின்றது. நாட்டில் தற்போது நடப்பவற்றைப் பார்த்தால் இராணுவ ஆட்சியொன்று ஏற்பட்டுவிடுமோவென எண்ணத் தோன்றுவதாக அவர் தெரிவித்துள்ளார். சில முக்கியமான பதவிகளுக்கு இராணுவத்தினர் நிய மிக்கப்பட்டமையை அவர் உதாரணமாகச் சுட்டிக் காட்டியுள்ளார். மிகவும் செழிப்பான பாகிஸ்தான் நாடு பின்னடைவுகளைச் சந்திப்பதற்கு அங்கு அடிக்கடி ஏற்படுத்தப்பட்ட இராணுவ ஆட்சியே காரணமாகும்.

பாகிஸ்தானில் இராணுவத்தின் கை ஓங்கி இருப்பதால் ஆட்சியாளர்கள் அவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். அதனால் உண்மையான ஜனநாயகத்தை அங்கு காணமுடியவில்லை. இவ்வாறானதொரு நிலை இலங்கையிலும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதே ஜனநாயகத்தை விரும்புகின்ற அனைத்துத் தரப்பினரதும் அவாவாகும். இதற்கேற்ப தற்போதைய ஜனாதிபதி செயற்படுவாரென எதிர்பார்ப்போம்.



டெங்கு விழிப்புணர்வு

**பிரத்தியேக மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லும் மாணவர்களுக்கான அறிவித்தல்**

- காய்ச்சலுடன் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதைத் தவிருங்கள்.
- நுளம்புக்கடியிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கை, காய்களை முற்றாக மறைக்கக் கூடிய முழு நீள ஆடைகளை அணியுங்கள்.
- நுளம்புக் கடியிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நுளம்புகளை விரட்டக் கூடிய மணமுள்ள சிற்றனெல்லா எண்ணெய்யை உடம்புக்கு குறிப்பாக கை, கால்களுக்குப் பூசுங்கள்.

*சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைப்பு*

## வலி.தென்மேற்குப் பிரதேச சபையில்

# சபை அமர்விலிருந்து எதிரணி வெளிநடப்பு

வலி.தென்மேற்கு, டிசெ. 24

வலி.தென்மேற்கு பிரதேச சபையில் விகிதாசார முறையில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் கௌரவத்துக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் செயற்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டி, 4 கட்சிகளைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சபை அமர்விலிருந்து வெளியேறினர். அதனால் சபை இந்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வருடத்துக்கான இறுதிக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை காலை தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது. 28 உறுப்பினர்களைக் கொண்ட பிரதேச சபையில் த.தே.கூட்டமைப்பைச் சேர்ந்த 12 உறுப்பினர்களும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 5 உறுப்பினர்களும் வாக்குகளின் அடிப்படையில் வட்டார ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

ஐ.தே.கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினனர் என 11 உறுப்பினர்களும் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சபையில் தவிசாளரின் தலைமையுரையைத் தொடர்ந்து விகிதாசார முறையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படும் வகையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் செயற்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டிய ஐ.தே.கட்சியைத் தவிர்ந்த ஏனைய 4 கட்சிகளைச் சேர்ந்த 13 உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறினர். இவர்களின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த தவிசாளர், கூட்டத்தை அடுத்த வாரத்துக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை, கடந்த ஒரு வருட காலமாகச் சபையுடன் இணைந்து செயற்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தற்பொழுது எதிர்த்து நிற்கின்றனர் என்றும் இது மர்மமாகவுள்ளது என்றும் அந்தப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (கு-115)

## ஒளிவிழா

சாவகச்சேரி,டிசெ.24

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஒளிவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வலயக் கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறும் விழாவில் கத்தோலிக்க கிறிஸ்தவ மதகுருமார் கலந்து கொண்டு ஆசியுரைகளை வழங்குவர். வலய அலுவலர்களின் இறை வழிபாட்டு நிகழ்வுகளும் இடம்பெறும். (க-9)

## கட்சி சார்புடைய இருவர் கைகலப்பு

வவுனியா, டிசெ. 24

வவுனியா கனகராயன் குளம் பகுதியில் இருவேறு கட்சி சார்புடையோர் என்று கூறப்படும் இருவர், தம் மீது தாக்குதல் நடத்தினார் என்று ஒருவர் மீது மற்றொருவர் குற்றஞ்சாட்டி பொலிஸில் முறையிட்டுள்ளனர் என்றும், இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. (து)





## ஆண்டு விழா

வவுனியா,டிசெ.24

வவுனியா மேற்கத்தேய நடனக் கல்லூரியின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபையின் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 3 மணி அளவில் இடம்பெற்றது.

கல்லூரியின் ஆசிரியர் சுஜித் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக றோயல் ஆங்கிலக் கல்லூரியின் இயக்குநர் திருமதி.கீதாஞ்சலி நகுலேஸ்வரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் நடனக்கல்லூரியில் அங்கம் வகிக்கும் மன்னார் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த மாணவர்களால் மேலைத்தேய நடன நிகழ்வுகள் கோலாகலமாக இடம் பெற்றன.

நிகழ்வில் பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன், பெற்றோர்கள்,மாணவர்கள், நடன ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-110)

## அட்டகாசம் புரிந்தவர் இறக்கப்பட்டார் நடு வீதியில்!

கிளிநொச்சி, டிசெ. 24

பேருந்தில் சக பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், போதையில் அட்டகாசம் புரிந்தார் என்று கூறப்படும் நபர் வீதியில் இறக்கிவிடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

குறித்த நபர் தனியார் பேருந்தில் பரந்தன் பேருந்து நிலையத்தில் இருந்து ஏறியுள்ளார். ஏறும் போதே அவருடைய நடவடிக்கை அருவருக்கத்தக்கதாக இருந்தது என்று சக பயணிகள் கூறினர். சிறிது நேரம் பயணித்தநிலையில், அவர் போதையில் பயணிகளுக்கு தொந்தரவு விளைவிக்கத் தொடங்கினார்.

அதனால் பேருந்தில் குழப்பம் ஏற்பட்டது. அவர் தகாத வார்த்தைகளைக் கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் நடத்துநரிடம் தெரிவிக்கப்பட்டது, இடையூறு ஏற்படுத்திய நபர் பேருந்திலிருந்து இறக்கிவிடப்பட்டார்.

இதுதவிர, குறித்த நபர் பயணம் செய்வதற்கான பணத்தைச் செலுத்தவில்லை என்றும் பற்றுச்சீட்டுப் பெற்றிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறிருந்தபோதும், தான் பணம் வழங்கினேன் என்றும் தன்னை இறக்குவதாக இருந்தால் பணத்தை மீளத் தருமாறும் பேருந்தில் குழப்பத்தில் ஈடுபட்டிருந்தார் என்றும் பயணிகள் தெரிவித்தனர். (து)





## இறுதிப்போட்டியும் விருது வழங்கலும்

மன்னார்,டிசெ.24

மன்னார் கலையருவியின் ஏற்பாட்டில் மறைமாவட்ட கிறிஸ்து விழாவின் கரோல் பாடல் இறுதிப்போட்டியும் சிறப்பு விருது வழங்கும் நிகழ்வும் அண்மையில் கலையருவி மண்டபத்தில் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்து கொண்டார். இதன்போது வெற்றி பெற்றவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஐ-56)



சில்லாலை தெற்கு இளைஞர் கழகம் மற்றும் சாந்தை சிறி சித்திவிநாயகர் சனசமூக நிலையம் இணைந்து நடத்திய கலாசார விழா மற்றும் பயணிகளுக்கான நிழற்குடை திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சாந்தை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றிலில் நடைபெற்றன. (க)

# சின்ன வெங்காயம் தட்டுப்பாடு அதிகரிக்கும் அபாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் ஒன்றாகப் பார்க்கப்படும் சின்ன வெங்காயத்துக்கு அடுத்த ஆண்டு மேலும் தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என்று அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சின்ன வெங்காயம் கிலோ 400 ரூபா முதல் 500 ரூபா வரையில் விற்கப்படுகின்றது.



வெங்காயத் தட்டுப்பாடு காரணமாக விதை வெங்காயமே தற்போது சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதனால் அடுத்த போகத்தில் விதை வெங்காயத்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால், வெங்காய உற்பத்தி பெரும் சரிவைச் சந்திக்கும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த காலங்களில் டிசெம்பர் மாதத்தில் 100 ரூபா முதல் 150 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனையாகி வந்த சிறிய வெங்காயம் இம்முறை 400 ரூபா தொடக்கம் 500 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

'திருநெல்வேலிச் சந்தையில் வெங்காய விற்பனையில் மாத்திரம் குறைந்தது 20 வர்த்தகர்கள் ஈடுபடுகின்றமை வழமை. தற்போது ஐந்து பேரே கடந்த சில நாள்களாக தொழிலில் ஈடுபடுகின்றனர்.

நாள் ஒன்றுக்கு 300 கிலோ விற்பனை செய்து வந்தோம். தற்போது 100 கிலோவை விற்பதே கடினமாக உள்ளது. யாழ்ப்பாண வெங்காயம் அழிவடைந்த நிலையில், சிறிய வெங்காயம் தம்புள்ளவில் 600 ரூபாவுக்கும், கொழும்பில் 700 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதால் அங்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. போதிய வெங்காயத்தை இங்கு பெற்றுக் கொள்ள முடியவில்லை' என்று திருநெல்வேலிச் சந்தையில் 30 ஆண்டுகளாக வெங்காய வியாபாரத்தில் ஈடுபடும் இந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் தியாகலிங்கம், டிசெம்பரில் சந்தைக்கு வரும் வெங்காயம் ஆடி மாதத்தில் பயிரிடப்படும்.

2019ஆம் ஆண்டு சிறுபோக வெங்காயச் செய்கை திடீர் மழையின் காரணமாக அழிவடைந்ததால் பாதிப்பு ஏற்பட்டது. தற்போது மேட்டு நிலத்தில் பயிரிடப்பட்டவையும் மழையால் அழிவைச் சந்தித்தன. சின்ன வெங்காயத்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. கையிருப்பில் இருக்கும் சின்ன வெங்காயம் மீள் நடுகைக்கு செல்லும் அதேநேரம் விதை வெங்காயமே பயன்பாட்டுக்கு சந்தைக்கு வருகின்றது. விதை வெங்காயம் ஒரு அந்தர் 20 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் நிலையில் அதுவே உணவுப் பயன்பாட்டுக்கும் வருகின்றது.

வடக்கில் சின்ன வெங்காயச் செய்கை ஆயிரக் கணக்கான ஏக்கரில் செய்யும்போதும் ஏற்படும் அழிவுகளுக்கு எந்தவிதமான காப்புறுதியும் கிடையாது. தெற்கில் சின்ன வெங்காயம் பயிரிடப்படுவது கிடையாது.

ஆனால் பெரிய வெங்காயச் செய்கை இடம்பெறுகின்றது. இலங்கையில் பெரிய வெங்காயம் அழிவடைந்தால் ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கப்படும்.

சிறிய வெங்காயத்துக்கு ஆயிரம் நாத்துக்கு, ஆயிரத்து 200 ரூபா காப்புறுதி செலுத்த வேண்டும். அதாவது ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாவைத் தாண்டும், என்றார்.

சிறிய வெங்காயச் செய்கை அழிவு தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அழிவு தொடர்பான விவரங்கள் திரட்டப்படுகின்றன. 400 ஏக்கர் முதல் 500 ஏக்கர் வரையான அழிவு ஏற்பட்டிருக்கக் கூடும்-என்றார். (ஒ.5,105)



## விளாத்திக்குளம் வீதி சீரமைப்பு

முல்லைத்தீவு,டிசெ.24

நீண்டகாலம் சீரமைப்பின்றிக் காணப்பட்ட வித்தியாபுரம் விளாத்திக்குளம் வீதி சீரமைக்கப்பட்டுள்ளது.

கம்பெரலிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்,10 லட்சம் ரூபா நிதியில் வீதி சீரமைக்கப்பட்டுளளது.

நீண்ட காலம் சீரமைப்பின்றிக் காணப்பட்ட வீதியால் பயணித்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வந்தனர். தற்போது மக்கள் பாவனைக்கு ஏற்றவாறு வீதி சீரமைக்கப்பட்டுள்ளதால், போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (க-500)

## சடலத்தை அடையாளம் காணக் கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்திருந்தார். அவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த முதியவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அவரைத் தெரிந்தவர்கள் அடையாளம் காட்டுமாறு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் கோரியுள்ளனர். அவரைப் பற்றிய தகவல்கள் தெரிந்தவர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஒ.5)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.24

கிளிநொச்சி முரசுமோட்டை சேற்றுக்கண்டி முத்துமாரியம்மன் ஆலயத்தில் மார்கழி மாத திருவாசக முற்றோதல் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து இந்த திருவாசக முற்றோதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை 9 ஆலயங்களில் தினமும் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-421)





## வசதியற்ற குடும்பத்துக்கு வீடு

யாழ்ப்பாணம்,டிசெ.24

கருகம்பனை இந்து இளைஞர் கழகம், யாழ் நகர் மைய றோட்டறக்ட் கழகம் மற்றும் யாழ் கே.கே.பி. இளைஞர் கழகம் ஆகியன இணைந்து அடிப்படை வசதிகளற்ற குடும்பம் ஒன்றுக்கு தற்காலிக வீடமைத்துக் கொடுத்துள்ளனர். பல சிரமங்களை எதிர்கொண்ட ஐந்து பிள்ளைகளுடன் வசித்து வரும், உரும்பிராயைச் சேர்ந்த குடும்பத்துக்கு, மூன்று கழகங்களின் முயற்சியால் குடிசையாக இருந்த வீடு மறுசீரமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (க-222)

## ஒரே சூலில் 3 குழந்தைகள் குடும்பத்துக்கு கொடுப்பனவு

ஏழாலை, டிசெ. 24

ஒரே சூலில் மூன்று குழந்தைகளைப் பிரசவித்த சமுர்த்தி பயனாளி குடும்பத்துக்கு, குழந்தைகளின் பராமரிப்புச் செலவுக்கென்று சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாதாந்தம் 10ஆயிரம் ரூபா வீதம் ஒரு வருடத்துக்கு வழங்கப்படவுள்ளது என்று உடுவில் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.


இணுவில் வடகிழக்கு, சபாபதிப் பிள்ளை வீதியில் வசிக்கும் ஒரு தம்பதியருக்கு கடந்த செப்ரெம்பரில் இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்துள்ளனர். மூன்று குழந்தைகள் பெற்றதால் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்திலிருந்து குழந்தை பிறப்புக்கான கொடுப்பனவாக 7ஆயிரத்து 500 ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, உடுவில் மத்தியில் ஒரே சூலில் கடந்த ஜூலையில் இரட்டைக் குழந்தை பெற்றெடுத்த சமுர்த்திக் குடும்பத்துக்கும் அதற்கேற்ற தொகையுடைய கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (து-39)

# திராட்சையில் நோய்த்தாக்கம்

## யாழ். விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம், டிசெ 24

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் திராட்சை செய்கை, காலநிலை மாற்றங்களால் நோய்த் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் செய்கையாளர்கள் பெரிதும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்று திராட்சை செய்கையாளர்கள் தெரிவித்தனர்.





இந்த மாதத்தில் தொடர்ச்சியாகப் பெய்த மழை, அதன் பின்னரான பனியுடனான கால நிலை காரணமாக திராட்சைக் கன்றுகளின் இலைகளில் மஞ்சள் நிற பங்கசின் தாக்கம் மற்றும் பூச்சிகளின் தாக்கம் ஏற்பட்டுள்ளன. அதனால் பழங்களின் விளைச்சல் குறைவடைந்து, பழங்கள் அழுகிய நிலையில் காணப்படுகின்றன. இதனால் உற்பத்தி செலவிடப்பட்ட தொகையைக் கூட விளைச்சலின் மூலம் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமைக்கு யாழ்.மாவட்ட திராட்சைச் செய்கையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மாகாண விவசாய பணிப்பளார் எஸ் .சிவகுமார் தெரிவித்ததாவது: "கூடிய முதலீட்டை இட்டு திராட்சைச் செய்கை மேற்கொண்டாலும் ,அதிக வருமானத்தைத் தர கூடிய பயிராக இது காணப்படுகிறது. கவனமாக இதனைப் பராமரிக்க வேண்டும். அதிக நோய் தாக்கக் கூடிய பயிராக இது காணப்படுகிறது. தற்போது நிலவும் கால நிலை பழ உற்பத்திக்குச் சாதகமானதாக இல்லை. பழங்கள் புளிப்புச் சுவையாகவும், வெடிக்கும் தன்மையாகவும் காணப்படும். இதனால் தொற்றுக்கள் ஏற்பட்டு பழங்கள் அழுகும் நிலை உருவாகும். பூஞ்சண நோய் அதிகமாக ஏற்பட்டு இலைகள் மஞ்சள் நிறமாக மாறி உற்பத்தி குறைவடையும். இந்த அழிவுக்கான காப்புறுதித் திட்டங்கள் இன்னமும் இல்லை.

அதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. கூடாரங்கள் அமைக்கப்பட்டு அதற்குள் திராட்சைச் செய்கையை மேற்கொள்ள்ளும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. அது ஏற்றுக் கொள்ளப் பட்டால் பனி, மழை போன்ற கால நிலையில் சிறப்பாக திராட்சை செய்கையை மேற்கொள்ள முடியும்" என்றார் .

(க-7)

# கணினி விற்பனை நிலையம் தீக்கிரை

வவுனியா, டிசெ.24

வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள கணினி விற்பனை நிலையம் நேற்று இரவு தீப்பிடிந்து எரிந்தமையால் பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்துள்ளன. விடுமுறை நாளான நேற்று குறித்த வர்த்தக நிலையம் மூடப்பட்டிருந்தது. இந்த நிலையில் இரவு 8 மணியளவில் மூடப்பட்ட கடையில் இருந்து புகை வெளிக்கிளம்பியுள்ளது. அதனை அவதானித்த சிலர் குறித்த வியாபார நிலையத்தின் உரிமையாளருக்குத் தெரியப்படுத்தினர். தீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.



சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா நகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். விபத்தில் வியாபார நிலையத்தில் இருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-110)

# இரணைதீவில் கடலட்டைக் கிராமம்

கிளிநொச்சி, டிசெ.24

இரணைதீவில் கடலட்டைக் கிராமம் ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு துறைசார் அதிகாரிகளுக்கு கடற்றொழில் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார். இரணைதீவை அண்டிய கடல்பிரதேசத்தில சுமார் 60 ஹெக்ரேயர் விஸ்தீரமான பகுதியில் கடலட்டை வளர்ப்புக்குப் பொருத்தமான சூழல் இருப்பது ஆய்வுகளின் மூலம் கண்றியப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாகப் போர் காரணமாக இடம்பெயர்ந்திருந்த மக்கள் அண்மையில் இரணைதீவில் மீளக் குடியமர்ந்தனர். எனினும், கடற்றொழிலை நம்பி வாழுகின்ற இரணைதீவு மக்களின் புனர்வாழ்வுக்கு கடந்த அரசால் போதிய கவனம் செலுத்தப்படவில்லை.

மக்களின் பிரச்சினைகள் கடற்றொழில் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து, இரணைதீவு கடல் பிரதேசத்தின் சூழலியல் தன்மைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, நாரா எனப்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தியிருந்தார்.

அதன்படி, கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கடல் உயிரியல் கடற்படுக்கை மற்றும் சூழலியல் ஆய்வாளர்கள் கொண்ட குழுவினர் நேரடியாக இரணைதீவுக்கு விஜயம் செய்து ஆய்வுகளை மேற்கொண்டனர். அதன் அடிப்படையில் கடலட்டை வளர்ப்புக்கு உகந்த பிரதேசமாக இது அடையாளம் காணப்பட்டுள்ளது. பிரதேசத்தில் கடலட்டைக் கிராமம் உருவாக்கப்படும் பட்சத்தில் இணைதீவில் மீளக் குடியேறியிருக்கும் மக்களின் வாழ்வாதாரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள கடலட்டைக் கிராமத்தின் மூலம் 350 க்கும் மேற்பட்ட இரணைதீவு மக்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வர். வருடாந்தம் சுமார் 3 கோடி ரூபா வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள முடியும் என்று துறைசார் நிபுணர்களால் மதிப்பிடப்பட்டுள்ளது. (க)

# காப்பெற்றாக மாற்றுவது பற்றி கலந்துரையாடல்



கிளிநொச்சி, டிசெ. 24

கிளிநொச்சியில் அமைய இருக்கும் காப்பெற் வீதிகள் தொடர்பான கலந்துரையாடல் கரைச்சிப் பிரதேச சபையில் சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

(ஐ)ரோட் திட்டத்தினூடாக சீரமைப்புச் செய்யப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கான ஆரம்பப் பணிகள் கடந்த மாதத்தில் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலர் சிவஞானசோதி தலைமையில் நடைபெற்றது. வீதிகளின் தெரிவுகள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன் ஏனைய பிரதேச சபைகளின் தவிசாளர்களால் செய்யப்பட்டிருந்தன. மொத்தமாக 181கிலோமீற்றர் வீதிகள் சீரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கலந்துரையாடலில் குறித்த திட்டத்தின் பணிப்பாளர் வனிதகுமார், மாவட்டங்களின் பணிப்பாளர்கள், பிரதேச சபை உபதவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (து-6)



கைதடி உதவும் கரங்கள் அமைப்பால், புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன் முள்ளம் தண்டு பாதிக்கப்பட்டவருக்குச் சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. பண்டாரிக்குளம் நெடுங்கேணியைச் சேர்ந்த பயனாளிக்கு சக்கரநாற்காலி வழங்கப்பட்டது. (க-159)

### வலி.தென்மேற்குப் பிரதேசத்தில்

# நுளம்பைக் கட்டுப்படுத்த பிரதேச சபை களத்தில்



**வலி.தென்மேற்கு, டிசெ.24**

**வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையைத் தொடர்ந்து, நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு வலி.தென்மேற்குப் பிரதேச சபை முன்வந்துள்ளது.**

சண்டிலிப்பாய் சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து 28 கிராம அலுவலர் பிரிவுகளிலும் கழிவுகள் அகற்று வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கழிவுகளைத் தரம் பிரித்து வழங்குமாறும் மக்களிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ள கழிவு அகற்றும் வேலைத் திட்டம் குறிப்பிட்ட நாள்களில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை ஜே/129, ஜே/130 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட சுதுமலை வடக்கு, சுதுமலை தெற்குப் பகுதிகளிலும், இன்று செவ்வாய்க்கிழமை ஜே/131, ஜே/132 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட சாவல்கட்டு, உயரப்புலம் பகுதிகளிலும், நாளை மறுதினம் வியாழக்கிழமை ஜே/133, ஜே/135 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட ஆனைக்கோட்டை, நவாலி வடக்குப் பகுதிகளிலும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை நவாலி கிழக்கு, நவாலி தெற்குப் பகுதிகளிலும், எதிர்வரும் சனிக்கிழமை 28 ஆம் திகதி மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் கிழக்குப் பகுதிகளிலும், எதிர்வரும் 30ஆம் திகதி மானிப்பாய் தெற்கு, மேற்குப் பகுதிகளிலும், எதிர்வரும் 31ஆம் திகதி சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய் மத்தி பகுதிகளிலும், எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி சண்டிலிப்பாய் மேற்கு, மாகியம்பிட்டி பகுதிகளிலும், எதிர்வரும் 2ஆம் திகதி வடலியடைப்பு, பண்டத்தரிப்பு பகுதிகளிலும், எதிர்வரும் 3ஆம் திகதி பிரான்பற்று, சில்லாலை வடக்குப் பகுதிகளிலும், எதிர்வரும் 4ஆம் திகதி சில்லாலை தெற்குப் பகுதியிலும், எதிர்வரும் 6ஆம் திகதி மாதகல் கிழக்குப் பகுதியிலும், எதிர்வரும் 7ஆம் திகதி மாதகல் தெற்கு, மாதகல் மேற்குப் பகுதிகளிலும், எதிர்வரும் 8ஆம் திகதி பெரியவிளான், மாரீசன் கூடல் பகுதிகளிலும், எதிர்வரும் 9ஆம் திகதி இளவாலை, முல்லானைப் பகுதிகளிலும் இடம்பெறும். (க-115)

## யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பழைய மாணவர் சங்கம் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தை மீளச் செயற்படுத்துவதற்கான ஒன்றுகூடல் பல்கலைக் கழக விஞ்ஞான பீட பௌதீகவியல் விரிவுரை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை 21ஆம் திகதி நடைபெற்றது. ஒன்றுகூடலில் 8 பேர் கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பழைய மாணவ சங்கத்தின் இடைக்கால நிர்வாகக் குழுத்தெரிவு இடம்பெற்றது.

இடைக்கால நிர்வாகக் குழுவின் தலைவராக எஸ்.தபோதரன், உபதலைவர் கே.ரஜீபன், செயலராக எஸ்.ரவி, உப செயலராக ப.கங்காதரன், பொருளாளராக தி.இந்திரகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகக்குழு உறுப்பினர்களாக யாழ்.தர்மினி பத்மநாதன், ஏ.அன்ரன் சாள்ஸ் மற்றும் ரஞ்சித் குமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆறு மாதங்களுக்கு இயங்கும் இந்த இடைக்காலக் குழுவினர் 20 வருடங்களுக்கு மேலாகச் செயற்படாதிருந்த சங்கத்தின் நிர்வாகச் சட்டக் கோவையை சில மாற்றங்களுக்கு உட்படுத்துவதுடன் புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் நண்பர்களையும் சமுதாய நலன்கருதி சங்கத்தில் இணைக்கும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன் மூன்று மாதங்களில் இரண்டாம் நிலைச் சந்திப்பும் இடம்பெறவுள்ளது. எனவே சமூக அக்கறை கொண்டு உதவிகோரும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், வேலை தேடும் பட்டதாரிகள் போன்றோருக்கு உதவும் வகையில் ஏனைய நிறுவனங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளாகப் பணியாளர்களாக பணிபுரியும் அனைவரையும் பங்குகொண்டு பழைய மாணவர் சங்கத்தை முனைப்புடன் இயக்க ஒத்துழைக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்று வெளியேறிய பலரும் சமூகத்தில் உயர்பதவியில் உள்ளார்கள். அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புக்கள் தேவை என்பதை மாணவர் ஒன்றியம் உணர்ந்து கொண்டுள்ளது.

அதன் காரணமாகவே இத்தகைய ஒன்று கூடலை நாம் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு ஊடாக ஒருங்கமைத்துள்ளோம். வடக்கு மக்களின் கல்வியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெரும் பங்காற்றுவது எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். அவ்வாறான செயற்பாடுகளைச் செய்வதற்கும் அவ்வாறானவர்களை இணைத்துக்கொள்வதற்கும் பல்கலைக் கழக பழைய மாணவர் சங்கமே சிறந்த பொறிமுறையாக நாம் எண்ணுகின்றோம். என்று மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுக்கின்றது. (த)



## கற்சிலைமடுவில் குப்பை, கழிவுகள் அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ. 24

முல்லைத்தீவு ஒட்டுசுட்டுசுட்டான் கற்சிலைமடுவில் ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதி ஓரங்களில் கழிவுகள், போத்தல்கள் என்பனவற்றைக்கொட்டிச்செல்வதால் சுற்றாடல் மாசடைகின்றது. இந்த இடத்தில் இத்தகைய கழிவுகளைக் கொட்ட வேண்டாம் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். கொட்டப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுவதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர். (த-500)

### வெளிக்கள அலுவலர்

## விஷம் அருந்தி சாவு

மன்னார், டிசெ. 24

நானாட்டான் பிரதேச சபையின் வெளிக்கள அலுவலர் விஷம் அருந்தி இறந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்துள்ளது என்ற முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிக்கள அலுவலர் அன்ரனிஸ் நிமால் கடந்த 14ஆம் திகதி காணாமல் போயிருந்தார். கடந்த வெள்ளிக்கிழமை நறுவிலிக்குளம் பொது மயானத்தில் பற்றைப்பகுதியில் அவரின் சடலம் மீட்கப் பட்டிருந்தது. சடலத்தை அண்மித்து நச்சுத் திரவப் போத்தலும் மீட்கப்பட்டிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-213)



## வீடு கையளிப்பு

ஊர்காவற்றுறை,டிசெ.24

இரண்டு மாவீரர்களை ஈழ விடுதலை போராட்டத்துக்கு வித்தாக்கிய மாவீரர் பெற்றோர் ஒருவருக்கு வீடு அமைத்து வழங்கப்பட்டது.

நாரந்தனை தம்பிரான் தோட்டம் புளியடி வீதி ஊர்காவற்றுறை பகுதியில் இந்த வீடு அமைத்து நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. புலம்பெயர்வாளர்களின் நிதி அன்பளிப்பில் றுமை ஒழிப்போம் வாழ வைப்போம் என்னும் மனிதாபிமான தொண்டு நிறுவனத்தால் வீடு அமைத்து வழங்கப்பட்டது. (ஐ-154)





ஒட்டுசுட்டான் இ.த.க பாடசாலையின் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திருமதி வேகாவனம் நித்தியகலா தலைமையில் நடைபெற்றது. (ஐ-222)

## கடன் அறவீடு நிறுத்தத்தின் எதிரொலி:

# அரிசி விலை குறைப்பு

கொழும்பு, டிசெ. 24

**சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் வங்கிகளில் பெற்றுக்கொண்ட கடன்களுக்கான அறவீடுகளை தற்காலிகமாக இடைநிறுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால், அடுத்த ஆண்டு தொடக்கம் அரிசியை 90 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியுமென அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.**

அரிசியின் விலை தொடர்ந்து கட்டுப்பாடற்ற விதத்தில் அதிகரித்து வந்ததால் 98 ரூபா என்ற கட்டுப்பாட்டு விலையை அரசு நிர்ணயித்துள்ளதுடன், அரிசி விலையைக் குறைப்பதற்கான மாற்று நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் பெற்றுக்கொண்ட கடன்களை அறவிடுவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அனைத்து வங்கிகளுக்கும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உத்தரவு பிறப்பித்ததுடன், கடனில் ஒரு பகுதியை வரிக் குறைப்புமூலம் வங்கிகள் பெற்றுக்கொள்ளும் சேமிப்பில் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது.

இதன் காரணமாக அரிசியின் விலையை குறைக்கக்கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளதாக அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் கூறியுள்ளது. அரிசி ஆலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரோஷன ஜனக டி சில்வா, வணிகக் கடன்களைக் குறைப்பதாக அரசு அறிவித்துள்ளது. இது மிகவும் திருப்திகரமான முடிவு.

இதன் காரணமாக அரிசி ஆலை உரிமையாளர்களாகிய நாம் ஜன வரி முதல் ஒரு கிலோ அரிசியை 90 ரூபாவுக்கு குறைவாக வழங்கவும் முடியும்- என்றார். (ஓ.5.24)

## கோத்தாவைச் சந்திக்க

# கூட்டமைப்பால் முடியவில்லை

### ஆனந்தன் எம்.பி. கூறுகின்றார்

வவுனியா,டிசெ. 24

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் ஜனாதிபதி கோத்தாபயவைச் சந்திக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

தற்போதைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் உட்பட பல்வேறு பிரச்சினைகளைக் கையாள்வது தொடர்பாக வவுனியா மாவட்ட பொது அமைப்பினர் மற்றும் புத்திஜீவிகளுடனான சந்திப்பு வவுனியா ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சிக்காலத்தில் எமக்கு கிடைத்த சந்தர்ப்பங்கள் தமிழ்த் தலைமைகளின் நிபந்தனையற்ற ஆதரவின் மூலம் நீர்த்துப்போகச் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்களின் அரசியல் உட்பட ஏனைய விடயங்களைக் கையாள்வதற்கு மாற்று வழி காணவேண்டிய நிலைமைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை, புதிய ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு தமிழ்க் கூட்டமைப்பு பல தடவைகள் முயற்சி எடுத்துள்ளது. அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அதற்கும் அப்பால் அரசுடன் பேசுவதற்கு இராஜதந்திர மட்டங்களோடும் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அந்த முயற்சிகளும் கைகூடவில்லை. கூட்டமைப்பின் இராஜதந்திர தோல்வியின் காரணமாக மாற்று வழிஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

மாற்று அரசியல் தலைமை ஒன்று தேவை என்பதை இங்கிருக்கும் எல்லோரும் வலியுறுத்தியிருக்கிறார்கள். அதை நோக்கி நாம் செல்வதனூடாகத்தான் எமது சகல விதமான பிரச்சினைகளையும் அரசுடனும், இராஜதந்திர மட்டங்களுடனும் கையாளக்கூடிய வழிமுறையை ஏற்படுத்தமுடியும். என்றார்.

"தனி நாட்டுக்குப் போராடிய தமிழ் மக்கள் இன்று வாழ்வாதாரத்துக்காகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்." என்று சந்திப்பில் கலந்துகொண்டிருந்தவர்கள் பலர் கவலை தெரிவித்தனர். தமிழ் மக்களின் எதிர்கால அரசியல், பாதுகாப்பு, போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அபிவிருத்திகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் சந்திப்பில் ஆராயப்பட்டன என ஆனந்தன் மேலும் தெரிவித்தார். (து-110)


# கசிப்பை தடுத்து நிறுத்துங்கள்

கைதடி, டிசெ. 24

கைதடி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் சட்டவிரோத கசிப்பு விற்பனை மிகத்தீவிரமாக இடம்பெற்று வருகின்றது என்றும் இதைக் கட்டுப்படுத்துமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அண்மைக் காலமாகவே இது இடம்பெற்று வருகின்றது.

போதையில் வருவோரால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மாலை நேரங்களில் மாணவர்கள் வீட்டில் கல்வி கற்க முடியாத அளவுக்கு மதுப்பிரியர்களின் அட்டகாசம் உள்ளது என்றும் கூறப்படுகின்றது.

கசிப்பு விற்பனையில் ஈடுபடுபவர் விற்பனைக்காக கசிப்பை வன்னியில் இருந்தே எடுத்து வருகின்றார் என்றும் மலிவு விலையில் கிடைப்பதால் மதுப்பிரியர்கள் பலர் இந்தப் பகுதியில் இரவு பகலாக உலாவித் திரிகின்றனர் என்றும் எனவே இந்த விடயத்தில் கிராம அலுவலரும்சனசமூகநிலையத்தினரும் கவனம் எடுக்கவேண்டும் என்றும் இங்கு கசிப்பு விற்பனையை முற்றாகத்தடை செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (து-288)



# இந்து மயானம் துப்புரவு

யாழ்ப்பாணம்,டிசெ.24

"பிரதேசத்தின் தூய்மையைப் பேணுவோம்"எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக செம்மணி இந்து மயானத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மக்கள் ஆதரவு மையத்தின் அனுசரணையுடன், இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தச் சிரமதானப் பணிகள் அண்மையில் இடம்பெற்றன.

இருபாலைதெற்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் பா.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செம்மணி இந்துமயானசபையின் தலைவர் லயன்.சி.லட்சுமிகாந்தன்.வலி.கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பிரதேச இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## வளன்புரத்தில் கசிப்பு விற்பனை

கொழும்புத்துறை, டிசெ 24

கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெற்று வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதனால் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

வீதிகளில் நடமாடும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் கவலை தெரிவித்துள்ளனர். (க-135)

# புலவர் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.24

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படும் 2020 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள், சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பாலபண்டிதர் பரீட்சையில் சித்தி அல்லது கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை (இந்துசமயம் அல்லது இந்துநாகரிகம் உட்பட) சித்தி அல்லது சைவசமய அறிவு அனுட்டானங்களை அனுஷ்டித்து வரும் 40 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்க முடியும்.

சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது இளஞ்சைவப்புலவர் தேர்வு அல்லது சித்தாந்த பண்டிதர் தேர்வு (சைவபரிபாலனசபை) அல்லது பண்டிதர் தேர்வு (ஆரிய திராவிடபாசா விருத்திச் சங்கம்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (க)

## பொலிஸ் அலுவலரின் குடும்பம் பயணித்த

# காரை மோதியது தனியார் பேருந்து

வவுனியா, டிசெ. 24

வவுனியா கண்டிவீதி ஜோசப் இராணுவ முகாமுக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வீதியில் பயணித்த சிறியரக காரை அதேதிசையில் பயணித்த தனியார் பேருந்து பின்புறமாக மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. இதன்போது வீதியோர பள்ளமான பகுதிக்கு கார் இழுத்துச்செல்லப்பட்டுள்ளது.



அதில் பயணித்த பெண் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியாப் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணை நடத்தினர். யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் பொலிஸ் அதிகாரி உட்பட அவருடைய குடும்பத்தினர் அந்தக் காரில் பயணித்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (து-110)

# மாற்றுத்தலைமை கோரியோர் உருக்குலைந்து போயுள்ளனர்

## கூட்டமைப்பின் சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, டிசெ. 24

**மா**ற்றுத்தலைமை என்ற கோஷத்தை முன்வைத்தவர்கள் ஆளுக்கொரு கட்சி தொடங்கிக்கொண்டு இன்று உருக்குலைந்து நிற்கின்றார்கள். இது எந்தவிதத்திலும் பயனற்ற விடயம் என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

அவருடைய அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாற்றுத்தலைமை என்ற கோஷத்தை வைத்தவர்கள் ஆளுக்கொரு கட்சி தொடங்கிக்கொண்டு இன்று உருக்குலைந்து நிற்கின்றார்கள். இது பயனற்ற விடயம். ஏதோவொரு வெளி சக்தி இவர்களை இயக்குவதாகவே சந்தேகப்படுகின்றோம். வேறு பண மூலங்கள் ஊடாக இயக்கப்படுகின்றார்களா என்ற சந்தேகமும் உள்ளது. வடக்குக் கிழக்கில் வாழாதவர்கள் மாற்றுத்தலைமை என்று கூறிக்கொண்டு இங்கு வருவதை எமது தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தலைமைகள் எமது வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்தே உருவாக்கப்படவேண்டும். மாற்றுக்கட்சிகளுக்கு ஜனநாயக உரிமையுண்டு. மக்கள் முன் அவர்கள் தங்களின் கொள்கைகளை முன்வைத்துச் செல்லலாம். வருகின்ற தேர்தலில்கூட அவ்வாறு என்றாலும்மக்கள்சரியானதீர்மானத்தை எடுப்பார்கள்.

இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்கள் மீள்குடியேற்றம் என்ற போர்வையில் இங்கு அழைத்து வரப்படுகிறார்கள். அவர்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய விடயங்கள், அடிப்படை வசதிகள், இருப்பிட வசதிகள், காணி வசதிகள் எதுவுமேசெய்துகொடுக்கப்படுவதில்லை. இதனால் இங்கு வந்தவர்களின் கருத்துக்களிலிருந்து இந்தியாவிலிருந்து மீளக்குடியேற வரவிரும்புபவர்கள்கூட இங்கு வரும் எண்ணத்தைக் கைவிடும் நிலை காணப்படுகின்றது. எமது மக்கள் அங்கிருக்கத் தேவையில்லை என்றாலும் இங்கு அழைத்துவர முன்னர் மீள்குடியேற்ற நடைமுறை ஒழுங்கமைக்கப்பட்டு அடிப்படை வசதிகள்செய்து கொடுக்கப்படவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒவ்வொரு காலத்திலும் சரியான முறையில் தீர்மானங்களை எடுத்திருந்தது. 2015இல் ஆட்சி மாற்றத்தின் பின் சுதந்திர ஆணைக்குழு 19ஆவது திருத்தத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டது. அதன் கீழ் ஜனநாயக சூழல் உருவாகியது. ஆனால் இப்போது வந்த புதிய அரசு 19ஆவது திருத்தத்தை இல்லாது செய்வதாகக் கூறிக்கொண்டு இருக்கின்றது. இது ஜனநாயகமற்ற அராஜக சூழலை உருவாக்கும் என்பது நிச்சயம். இந்த விடயங்களை சிங்கள மக்கள் கருத்திற்கொள்கின்றார்களோஇல்லையோ நான் அறியேன். அவர்களுக்கு தங்கள் மூக்குப் போனாலும் தமிழர்களுக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என்ற முடிவுகளை அவர்கள் எடுக்கின்றார்களா என்று தெரியவில்லை. சிங்கள மக்கள் இந்த ஜனநாயக சூழல் உருக்குலைவதற்கு விடாத வகையில் அவர்களின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும்.

ஜனாதிபதியின் நகரை தூய்மைப்படுத்தும் திட்டத்தின் கீழ் சுவர்களில் ஓவியம் வரையும் செயற்பாடு நல்ல விடயம். தமிழ்ப் பகுதிகளில் எமது இளைஞர்கள் ஈடுபாட்டுடன் சுவரோவியம் வரைவது சிறந்த விடயம். ஆனால் எமது கலாசாரத்தைச் சிதைக்கும் வகையில் மாற்றினத்தின் கலாசாரம் உள்நகர்த்தல் நடைபெறுவதாகத் தெரியவருகின்றது. அவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். என்றார். (து-110)

# குடிமனைக்குள் 8 அடி முதலை



வவுனியா,டிசெ.24

வவுனியா மன்னார் பிரதான வீதியில், வேப்பங்குளம் வவுனியா தெற்குப் பிரதேச சபை முதலாம் ஒழுங்கையில் குடிமனைக்குள் புகுந்த 8 அடி நீளமான முதலை பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

முதலையின் நடமாட்டத்தை அவதானித்து நாய்க்ள் குரைத்தமையை அடுத்து, வீட்டின் உரிமையாளர் வீட்டுக்கு வெளியே சென்று பார்த்த போது, முதலையை அவதானித்துள்ளார். அதனையடுத்து அயலவர்களுக்குத் தெரியப்படுத்தினார். உடனடியான அயலவர்களின் உதவியுடன் இரவிரவாகப் பல மணிநேரம் போராடி நேற்று அதிகாலை முதலையை மடக்கிப் பிடித்துக் கட்டி வைத்தனர்.

நெளுக்குளம் பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் தெரியப்படுத்தியதை அடுத்து, வனஜீவராசிகள் திணைக்களத்தினர் முதலையை மீட்டுச் சென்றனர். (க-ரி4)


# வீதியின் குறுக்கே வெள்ளம் போக்குவரத்து பாதிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 24

வடமராட்சி கிழக்கு பகுதியைச் சேர்ந்த மக்கள் இலகுவாக ஏ9 வீதிக்கு செல்லும் குறுக்கு வீதியில் கடந்த சில நாள்களாக வெள்ளம் பாய்கிறது என்று சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த வீதியால் மக்கள் பயணிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இயக்கச்சி சந்தியில் இருந்து சுமார் 200 மீற்றர் தூரமளவில் வீதியை குறுக்கறுத்து மழைவெள்ளம் பாய்ந்தவண்ணம் உள்ளது. இயக்கச்சிச் சந்தியில் இருந்து கோயில் வயல் சங்கத்தார் வயல் ஊடாக புளியடி வரை செல்லும் வீதியிலேயே இவ்வாறு வெள்ளம் பாய்கிறது. கிளிநொச்சியின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்டது அந்த வீதி என்று தெரிவிக்கப்படுகிறது. பல வருட காலமாக இந்த வீதியில் குறிப்பிட்ட இந்த இடத்தில் மாரிகாலத்தில் வெள்ளம் பெருக்கெடுக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால் அந்த இடத்தை அண்டிய இடங்களில் உள்ள வீதியும் சிதைவடைந்துள்ளது. இதனால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் மிகுந்த சிரமத்தை எதிர்நேக்கி வருகின்றனர். கடந்த காலங்களில் பெய்த மழையால் வெள்ளம் பாய்ந்துகொண்டிருந்தது. தற்போது தணிந்த நிலையில் உள்ளது இந்தச் சந்தர்ப்பத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையினர் இதனைக் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட அந்த இடத்தில் மக்கள் சிரமமின்றி பயணத்தை மேற்கொள்வதற்கு பாலம் அமைக்கவோ அல்லது வேறு ஏதாவது வழியில் போக்குவரத்தை துரிதப்ப டுத்தவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-70)

# புதிய கட்டடம் திறப்பு



யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலைய புதிய கட்டடம் கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்து கொண்ட நினைவுக் கல்லையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

மேலும் நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவைசோ சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம், யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர், யாழ் மாநகரசபை உறுப்பினர்கள், பாசையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலைய உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# ஒரு வருடத்தில் 833 முறைப்பாடுகள்

ஒரு வருட காலத்தில் வவுனியா மாவட்டத்தில் காணிப் பிணக்குகள் தொடர்பில் 833 முறைப்பாடுகள் விசேட காணி மத்தியஸ்தர் சபையிடம் ப்திவு செய்யப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் ஐ.எம். ஹனீபா தெரிவித்தார். வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபையின் ஓராண்டு பூர்த்தி நிகழ்வு சபையின் தவிசாளர் இ.நவரட்ணம் தலைமையில் குடியிருப்புக் கலாசார மண்டபத்தில்நேற்றுமுன்தினம்இடம்பெற்றது. அதில்அவர்மேலும் தெரிவித்ததாவது: வவுனியா மாவட்டத்தில் 833 காணிப்பிணக்குகள் விசேட காணி மத்தியஸ்தர் சபையிடம் கிடைக்கப் பெற்றுள்ளன. அதில் 132 பிணக்குகள் இரு பகுதியினரின் சம்மதத்துடன் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. வவுனியா பிரதேச செயலகப் பிரி வுக்குட்பட்ட 333 காணி பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரச உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் 2020 ஆம் ஆண்டில் அவ்வாறான நிலைமைகள் இருக்காது. என்றார். நிகழ்வில் வவுனியா வடக்குப் பிரதேச செயலர் க.பரந்தாமன், வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலர் க.சிவகரன், வவுனியா தெற்குப் பிரதேச செயலர் எம்.எஸ்.ஜானக, மத்தியஸ்தர் சபைகளின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு, மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ.விஜயகுமார், வனவளத் திணைக்கள மாவட்ட பொறுப்பதிகாரி கே.நாணயக்கார, மத்தியஸ்தர் சபைகளின் பயிற்சி உத்தியோகத்தர் எஸ்.விமலராஜா, விசேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-110)

## வீதி விபத்தில் இருவர் காயம்

வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளான தில் அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கேரதீவுபகுதியில்இடம்பெற்றது. இந்த விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20வயதுடையஆணொருவரும்,19 வயது பெண்ணொருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் இருந்து கேரதீவு நோக்கி பயணித்த வேளையே இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (ஜ-159)

### தேர்தலில் போட்டியிட

# பிக்குகளுக்கு இடமளியாதீர்!

### மல்வத்த பீடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 24

நாடாளுமன்றத் தேர்தலில் பிக்குகள் போட்டியிடுவதற்கு அரசியல் கட்சிகள் வாய்ப்பு வழங்கக் கூடாது என்று மல்வத்த பீடத்தின் அனுநாயக்க தேரர் வண. திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் தெரிவித்துள்ளார்.

'அரசியல்வாதிகளுக்கு அறிவுறுத்துவதன் மூலமும், தங்கள் பொறுப்புகளை முறையாகச் செய்வதன் மூலமும், பிக்குகள் நாட்டுக்கும், மதத்துக்கும் சிறந்த சேவையை வழங்க முடியும். எமது பிக்குகள் அரசியல் காரணமாக மனக் கிளர்ச்சியுடன் செயற்படுகிறார்கள். உலகெங்கிலும் உள்ள பிக்குகளின் மரியாதையும் புகழும் பாதிப்படையத் தொடங்கியுள்ளன. பிக்குகளை அரசியலில் சேர்த்துக் கொள்ள வேண்டாம். பிக்குகள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்ற முடிவை எடுக்க வேண்டும். பிக்குகள் நாட்டின் தலைவர்களுக்கு சரியான பாதையைக் காட்ட வேண்டும், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.5)



## மரக்கன்றுகள் கையளிப்பு

முல்லைத்தீவு,டிசெ.24

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த 55 குடும்பங்களுக்கு 2 ஆயிரத்து 500 தென்னை மரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் 64 ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் தென்னை ஆராய்ச்சி உத்தியோகத்தர், கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், நெடுங்கேணி ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் இராணுவத் துறைசார் பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஜ-70)

# கோத்தாவின் திட்டத்துக்கு பட்டதாரிகள் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ. 24

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக உடனடியாக நியமனங்களை வழங்குமாறு கோரியும் ஜனாதிபதியின் பெயரில் விநியோகிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்துக்கு எதிராகவும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ஒன்றிணைந்த தொழிலற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருதில் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளின் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. ஒன்றிணைந்த தொழிலற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தன்னே குணானந்த தேரர் தெரிவித்ததாவது:

வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு முரணாக நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கின்றது. புதிய நியமனங்களை. பெரும்பாலும் அரசகட்சி சார்ந்தவர்களுக்கே வழங்கவுள்ளமை தொடர்பில் சந்தேகம் எழுகின்றது. புதிய ஜனாதிபதியின் பெயரில் பச்சை மற்றும் சிவப்பு நிறத்தில் ஒரு விண்ணப்பப்படிவம் பட்டதாரிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக 57 ஆயிரம் வரையான வேலையில்லாப் பட்டதாரிகள் தோற்றியுள்ளதுடன் இரண்டு நேர்முகத் தேர்வுகளுக்கும் சமுகமளித்து எமது பட்டதாரிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதற்காக மாவட்ட செயலகத்தின் ஊடாகவும் பிரதேச செயலகம் ஊடாகவும் நேர்முகத் தேர்வு இடம் பெற்றுள்ளதுடன் அதற்காக நிதியும் எமது பட்டதாரிகளால் செலவிடப்பட்டுள்ளது. அதற்காக நேரமும் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த தேர்வுகளில் அரசு சில ருக்கு மாத்திரமே வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுத்தது.


ஏனைய வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலையை பெற்றுக்கொடுப்பதில் புதிய அரசு தற்போது முறைகேடாக நடக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. கடந்த அரசு வேலையில்லா பட்டதாரிகள் 20 ஆயிரம் பேருக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கியது தொடர்பில் அமைச்சரவையில தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் கடந்த அரசு பாரபட்சமாக செயற்பட்டமை போன்று இந்த அரசும் ஈடுபடக்கூடாது.

நாடு முழுவதும் 54 ஆயிரத்துக்கும் அதிகமான வேலையில்லாப் பட்டதாரிகள் இருக்கின்றனர். அவர்களுக்கு நியமனங்களை வழங்குமாறு கோரி கடந்த 2 வருடங்களுக்கும் மேலாக போராட்டங்களை நடத்தி வருகின்றோம். அதன் விளைவாக 16 ஆயிரத்து 800 பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குவதாக கடந்த அரசு அறிவித்துடன் அவர்களில் முதற்கட்டமாக 12 ஆயிரத்து 133 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. இந்த நியமனங்களின் போதும் பட்டதாரிகள் உள்வாரி வெளிவாரி என்று பிரிக்கப்பட்டமையால் குழப்பநிலை ஏற்பட்டிருந்தது.

அதிகளவில் உள்வாரிப்பட்டதாரிகளுக்கே நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. பட்டதாரிகளை அவ்வாறு பாகுபடுத்தாமல் அனைவருக்கும் நியமனங்கள் முறையாக வழங்கப்பட்ட வேண்டும். இந்த நடவடிக்கைகள் உரிய வகையில் நடைபெறவேண்டும். அனைத்து பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படாவிடின் நாடுதழுவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் என தெரிவிக்க விரும்புகின்றோம் என்றார். (ஓ.5)

### வர்த்தகர்களுடன் கலந்துரையாடல்

வவுனியா நகரசுக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பாக வர்த்தக நிலைய உரிமையாளர்களுடனான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நகரசபை மண்டபத்தில் இடம்பெறும். நகரப்பகுதி வர்த்தக நிலையங்களின் உரிமையாளர் தே.அ.அட்டை, தொலைபேசி இலக்கம், முகவர், வர்த்தக நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களின் பெயர் விவரங்களையும், தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஊழியர்களின் விவரங்களையும் எடுத்துவருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



## நத்தாருக்கான பொருள் கொள்வனவு தீவிரம்

கொழும்புத்துறை,டிசெ 24

கிறிஸ்து பிறப்பு நத்தார் தினத்தை முன்னிட்டு, பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.நகர் மற்றும் புறநகர், கிராமப் பகுதிகளில் சந்திகள் தோறும் விற்பனைகள் இடம்பெறுகின்றன.

சவுக்கம் கிளைகள், பாலன் குடில்களை மக்கள் ஆர்வமுடன் கொள்வனவு செய்வதைக் காண முடிகிறது. அதேவேளை விற்பனை நிலையங்கள் தோறும் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கிறிஸ்மஸ் அலங்காரப் பொருள்கள் மின்விளக்குகள், பட்டாசுகளையும் மக்கள் கொள்வனவு செய்து வருகின்றனர். (க-135, 17)

# எளிமையாக கொண்டாடவும்

### கர்தினால் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ. 24

இலங்கைகிறிஸ்தவர்கள்கிறிஸ்மஸ்ஸை இம்முறை எளிமையாக கொண்டாட வேண்டுமென பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கேட்டுக்கொண்டுள்ளார். கிறிஸ்தவ மதம் இதனைத் தான் போதித்துள்ளது என்றாலும், ஏப்ரல் மாதம் ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாலும் நாம் இவ்வருடம் எளிமையைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலில் 300 பேர் வரை கொல்லப்பட்டமையுடன் நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர். அண்மைக்காலத்தில் உலக சரித்திரத்தில் இடம்பெற்ற மோசமான படுகொலைச் சம்பவம். இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிலர் இப்போதும் மயக்க நிலையிலேயே உள்ளனர். சிலர் மருத்துவமனைகளில் உள்ளனர். பல குடும்பங்கள் முற்றாக பாதிக்கப்பட்டு நிர்க்கதி நிலையில் உள்ளன என்று ரஞ்சித் ஆண்டகை மேலும் கூறினார்.



ஸ்ரீஈஸ்டர் தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு ஒரு வாய்ப்பாக இந்த கிறிஸ்மஸ் தினத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறும், இம்முறை கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின்போது அரசு மேலதிக பாதுகாப்பை வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ளதாகவும் கர்தினால் குறிப்பிட்டுள்ளார். (ஓ.5)

# முசலி பிரதேச சபை பாதீடு நிறைவேற்றம்

மன்னார், டிசெ. 24

மன்னார் முசலிப் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் 11 உறுப்பினர்களின் ஆதரவுடன் நேற்றுத் திங்கட்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது.



அகில இலங்கை மக்கள் காங்கிரசின் நிர்வாகத்தின் கீழ் முசலி பிரதேச சபைத் தவிசாளர் ஹலீபத்து சுபியான் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்றுச் சபையில் சமர்ப்பித்தார். அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 5 உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. 4 உறுப்பினர்களை கொண்ட முஸ்லிம் காங்கிரஸின் 2 உறுப்பினர்களும், பொது ஜன பெரமுனவை சேர்ந்த ஓர் உறுப்பினரும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியை சேர்ந்த ஓர் உறுப்பினருமாக ஐவர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

எதிர்க்கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் இருவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இருவரும் ஆதரவாக வாக்களித்தனர். இவர்களுடன் ஆளும் கட்சியின் 7 உறுப்பினர்களும் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். (த-56)

# கிராமத்துக்குள் புகுந்து யானைகள் அட்டகாசம்

வவுனியா,டிசெ.24

வவுனியா செட்டிகுளம் கணேசபுரம் கிராமத்துக்குள் நேற்று அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் அட்டகாசத்தில் ஈடுபட்டன. தற்காலிக வீடொன்றைச் சேதப்படுத்தியதுடன், பயன்தரு மரங்களையும் சேதமாக்கியுள்ளன.

சேதமடைந்த வீட்டை அந்த பகுதிக்கான கிராமசேவகர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.



வவுனியா செட்டிகுளத்தில் பல்வேறு பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் தினமும் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர். (க-110)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

### அமரர் வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை



கடந்த 27.11.2019 சிவபதமடைந்த எமது குடும்பத்-தலைவர் அமரர் வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25.12.2019) புதன்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 27.12.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 15.06.1933
இறப்பு 27.11.2019

குடும்பத்தினர்.
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

காரைநகர் பிரதேச சபைக்குச் சொந்தமான கசூரினா சுற்றுலாமையத்தில் அமைந்துள்ள பாரம்பரிய உணவகத்திற்கான

## மீள் கேள்வி அறிவித்தல் 2020

யாழ்.மாவட்ட எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பொதுமக்களிடமிருந்து 01.01.2020-31.12.2020 ஆம் திகதி வரை கீழ் குறிப்பிடப்படும் குத்தகை அடிப்படையில் பாரம்பரிய உணவகத்தினை வழங்குவதற்கு ஏதுவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் வழங்கப்படும் திகதி : 24.12.2019 – 30.12.2019 மு.ப.10.00 வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் திகதி, நேரம் : 30.12.2019 பி.ப 1.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி.நேரம்: 30.12.2019 பி.ப. 2..00 மணி

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், காரைநகர் பிரதேச சபை என்ற முகவரிக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

01. கேள்விப் பத்திரங்களைப் பெறவிரும்புபவர்கள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் யாழ்.மாவட்டத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராமசேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப்பிரதியுடன் விண்ணப்பதாரி நேரடியாக சமுகமளித்தல் வேண்டும்.
02. கேள்விப் பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக்கப்படும் வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
03. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றி அறிவிக்கும் கடிதம் கிடைத்து 7 நாட்களுக்குள் உரிமத் தொகையின் முழுத் தொகையையும் ஒரே தடவையில் செலுத்தி,03 வருடங்களிற்கான உடன்படிக்கை செய்து பாரம்பரிய உணவகத்தை பொறுப்பேற்காது விடின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படுவதுடன் கேள்விப் பிணைப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
04. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.
05. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டால் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்படமாட்டாது.
06. சித்தி பெறாத கேள்விதாரர்களின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
07. கேள்வி தொடர்பாக மேலதிக விபரங்களை காரைநகர் பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

குறிப்பு : மாதர்சங்கம் ,கிராமிய மட்ட அபிவிருத்திச்சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| இல | விபரம் | கேள்விப் படிவக்கட்டணம்(மீளளிக்க முடியாதது) | மாதாந்த வாடகை | கேள்வி வைப்பு கட்டணம் (மீளளிக்க கூடியது) | ஆரம்பக் கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கசூரினா சுற்றுலா மைய பாரம்பரிய உணவகத்திற்கான கேள்வி கோரல் | ரூபா 250.00 | ரூபா 3000.00 | ரூபா 1000.00 | ரூபா 45,600.00 |

**தவிசாளர்,**
**பிரதேசசபை**
**காரைநகர்.**

## மரண அறிவித்தல்

### இராமு வேலுப்பிள்ளை கணேசன்



வாரிவளவு, காரைநகர் மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொட்டடி 151, சிவன் பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமு வேலுப்பிள்ளை கணேசன் 22.12.2019 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

**தகவல்: க.கணேசரத்தினம் (ராசன்)**
67/42, சீனிவாசகம் வீதி,
தறுமலிங்கம் லேன், கொட்டடி, யாழ்ப்பாணம்.

077 649 2696, 077 308 2070, 077 728 3811

## Second Year Rememberance



**Late A.Neelakandan**
**(Retd Project Manager - Irrigation)**
**24.12.2017**

We Pray God the almighty to bless and grant you eternal peace.

**OM Shanthi! Shanthi!! Shanthi!!!**

**Fondly remembered by:-**

Wife - Radha
Sons - Murali, Giri & Thulasi
Daughters in Law:- Padma, Asthiri & Kishanthi
Grand Children:- Tallan, Tasha, Maya, Sheela& Mithuvarshan
175, Kandy Road, Chavakachcheri, Sri Lanka.

# ‘எங்களைக் கைது செய்யவா ஆணை’

## கோத்தா அரசிடம் கேள்வி தொடுக்கிறார் பொன்சேகா



கொழும்பு, டிசெ. 24

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்வதற்கான மக்கள் ஆணையை, ஜனாதிபதித் தேர்தலில் அரசு பெற்றுள்ளதா என்று, நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவை வெலிக்கடைச் சிறையில் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

‘சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டிருக்கின்றமை நாட்டின் ஆட்சியாளர்கள் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் அவர்கள் மேற்கொண்ட பழிவாங்கும் வேட்டையை, மீண்டும் தொடங்கியிருப்பதற்கான அறிகுறியை வெளிப்படுத்தியிருக்கிறது.

ரணவக்கவை கைது செய்வதை விட, அரசு சிந்திக்க வேண்டிய வேறு பல பிரச்சினைகள் உள்ளன.

உண்மையான பிரச்சினை என்னவென்றால், முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் வாகனத்துடன், மோதி விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள் சாரதி ஆயிரம் சிசி மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றார். இது இலங்கையில் தடைசெய்யப்பட்டது. அவரே வேகமாக வந்து சம்பிக்க ரணவக்கவின் வாகனத்துடன் மோதினார்’ என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,5)



## சுனாமி நினைவேந்தல் அம்பாறையில் ஏற்பாடு

அம்பாறை, டிசெ. 24

சுனாமிப் பேரலைத் தாக்குதலின் 15 ஆவது வருட நினைவேந்தல் அம்பாறையில் நாளை மறுதினம் உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளது.

2004 டிசெம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமிப் பேரலையால் மாவட்டத்தின் கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் கிராமங்கள் பல பாதிக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம் மக்களும் காவு கொள்ளப்பட்டிருந்தனர்.

இந்தப் பேரவலத்தின் நினைவுதின நிகழ்வுகள், அஞ்சலி நிகழ்வுகள் என்பன வழக்கம்போல் இந்தமுறையும் உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி கரையோரப் பிரதேச கிராமங்களில் இவை இடம்பெறவுள்ளன.

இதேவேளைநினைவுத்தூபிகளுக்கு தீந்தை பூசி அழகுபடுத்தும் செயற்பாடுகளும் இடம்பெற்றுள்ளன.

கல்முனை முதலாம் பிரிவிலுள்ள சுனாமி நினைவுத்தூபியை சைனிங் விளையாட்டுக் கழகத்தினர் அழகுபடுத்தியுள்ளனர். (து-30)

## ராஜிதவுக்கு மற்றொரு நெருக்கடி

கொழும்பு, டிசெ. 24

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் களுத்துறை மீகஹெறத்தென்ன பகுதியிலுள்ள வீட்டில் மர்மங்கள் இருக்கின்றன என பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. அந்தப் பகுதியைப் பொலிஸார் கண்காணித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வலல்லவில பிரதேசசபை உறுப்பினர்கள் இருவர் இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளனர். அந்தப் பகுதியிலுள்ள ராஜிதவின் வீட்டை சோதனையிடும்படியும், அங்கு சந்தேகத்துக்கு இடமான செயற்பாடுகள் நடப்பதாகவும் அவர்கள் பொலிஸில், முறையிட்டுள்ளனர். இதன்படி, அந்த வீட்டைச் சோதனையிட நீதிமன்ற அனுமதியைப் பெற பொலிஸார் முடிவு செய்துள்ள னர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நேற்று முந்தினம் தொடக்கம், நீதிமன்ற உத்தரவு பெறும்வரையில் அந்தப் பகுதியில் பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ராஜித சுகாதார அமைச்சராக பணியாற்றியபோது, அமைச்சின் வாகனங்களைப் பயன்படுத்தி அந்தப் பகுதியில் கட்டுமானப்பணிகள் நடந்தன என்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ,5)

## சஜித் தரப்பின் ‘பிளான் பி’

கொழும்பு, டிசெ. 24

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைத்துவம் தொடர்பாக தெளிவாக முடிவு எடுக்கப்படாவிட்டால், தனி அணியாகத் தேர்தலில் களமிறங்கும் ஏற்பாடுகளையும் சஜித் பிரேமதாஸ செய்து வருகிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களுடன், சிறுபான்மையினக் கட்சிகளுடன் கூட்டாகத் தேர்தலில் களமிறங்க வியூகம் வகுத்து வருகிறார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுமையாக சஜித்தை ஆதரிக்கிறார்கள். தற்போது ஐக்கிய தேசியக் கட்சி தரப்பில் 78 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். மிகப்பெரும்பாலானவர்கள் சஜித் அணியுடனேயே இருக்கிறார்கள்.

தனது ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், தமிழ் முற்போக்குக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றையும் இணைத்துக் கூட்டணியாக களமிறங்கும் பேச்சுக்களில் சஜித் தரப்பு இறங்கியுள்ளது.

கட்சித் தலைமைப் பதவி வழங்கப்படாவிட்டால், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக களமிறங்க மாட்டேன் என்று சஜித் உறுதியாக அறிவித்து விட்டார். எனினும், அவருக்கு அந்தப்பொறுப்பை வழங்காமல் தட்டிக்கழிப்பதில் ரணில் தரப்பு தொடர்ந்து ஈடுபடுவதால் சஜித் இந்த முடிவை எடுத்துள்ளார் எனத் தெரிகிறது. (ஒ,5)

## ஐ.தே.கவுக்குள் பிளவு இல்லை!

### *தலைமைத்துவம் மாற காலமிருக்கின்றது என்கிறார் ரவி*

கொழும்பு, டிசெ. 24

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பாக எதிர்காலத்தில்தான் சிறப்பான முடிவொன்று எடுக்கப்படும் என்று அந்தக் கட்சியின் உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பாக தற்போது அதிகமாகக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இதற்குச் சில காலங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடாகும். அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எந்தவொரு பிளவும் ஏற்படவில்லை. 2020 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் எமது கட்சி வலுவடையும். பொறுமையாக இருக்குமாறு நான் அனைத்துத்தரப்பிடமும் கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (ஒ,5,22)

## *ரிஷாத், ஹக்கீமிடம் விசாரணை!!!*

ஏப்ரல் 21உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னாள் அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியூதீன் ஆகியோரிடம் வாக்குமூலம் பெறுவதற்கான அறிவித்தல் சட்ட மா அதிபரால் குற்ற விசாரணைப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரி, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தார்.

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு விசாரணைக்கு வந்தது. இதன்போதே இந்த தகவலை குற்ற விசாரணைப் பிரிவு மன்றுக்கு அறிவித்தது. (ஒ,5)

## எம்.சி.சி. மீளாய்வுக் குழுவின் தலைவருக்கேதெரியாத ஆணை

கொழும்பு, டிசெ. 24

மிலேனியம் சவால் நிறுவன (எம்.சி.சி) உடன்பாட்டை, மீளாய்வுசெய்யநியமிக்கப்பட்ட குழுவுக்கு, அதன் நோக்கம் மற்றும் அதன் ஆணையின் கால எல்லை குறித்து இன்னமும் தெரிவிக்கப்படவில்லை, என்று கொழும்பு ஆங்கிலவாரஇதழ்செய்திவெளியிட்டுள்ளது.

முன்னைய அரசின் அமைச்சரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எம்சிசி உடன்பாட்டை இடைநிறுத்தி வைக்க தற்போதைய அமைச்சரவை முடிவு செய்ததுடன், இந்த உடன்பாட்டை மீளாய்வுசெய்துபரிந்துரைகளைமுன்வைப்பதற்காக நான்கு பேர் கொண்ட குழுவொன்றையும் நியமித்தது.

இந்த நிலையில், இந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் லிதசிறி குணருவன் கருத்து வெளியிடுகையில்; எமக்கு இன்னும் எந்த விவரங்களும் தரப்படவில்லை. ஒரு குழுவை நியமிக்க அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வந்துள்ளது. இதற்கானவிதிமுறைகளைஅரசுவழங்கும். இப்போதைக்கு, குழுவின் நோக்கம் எங்களுக்குத் தெரியாது, என்று கூறியுள்ளார். (ஒ,5)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை

# தரமுயர்த்தாவிட்டால் போராட்டம் வெடிக்கும்

## கோடீஸ்வரன் எச்சரிக்கை



அம்பாறை, டிசெ. 24

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தித் தராவிட்டால் அம்பாறையில் வாழும் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் ஒன்றுதிரட்டி போராடவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப் பகுதிகளில் மூன்று பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகளின் அவசியம் இருக்கின்றது.

புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்க வேண்டிய கடப்பாடுகளில் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும். பொத்துவில் பிரதேசத்தில் கோமதியை மையமாகக்கொண்டு ஒரு பிரதேச செயலகமும், சம்மாந்துறை பிரதேசத்தில் மல்வத்தையை அடிப்படையாக கொண்ட பிரதேச செயலகங்களும் உருவாக்கப்பட வேண்டியது அவசியம்.

இதற்குக் காரணம் எங்களது நிலம் ஆக்கிரமிக்கப்படுவதாகும். எமது பொருளாதார வளம் சுரண்டப்படுகிறது. திட்டமிடப்பட்ட முறையில் ஏனைய சமூகங்களால் அழிக்கப்படும் கலை, கலாசாரம், கல்வி மற்றும் தேசியத்தை பாதுகாப்பதற்கு புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கப்படும் போது தன்னிறைவு பெற்றசமூகமாகமாற்றம்பெறமுடியும்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவற்காக் நாங்கள் பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். பிரதேச செயலகத்தை தரமுயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் பலதரப்பட்ட பேச்சு நடத்தியிருந்தோம். பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்தோம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அரசு தரமுயர்த்தித் தருவதாக இறுதிவரை சொல்லி எங்களை ஏமாற்றிவிட்டது.

தேர்தல் காலத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பரப்புரை மேடைகளில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறு வாக்குக் கேட்டார். மக்கள் அதற்கு இசைந்து கணிசமாக வழங்கினர். ஜனாதிபதியானால் மூன்று நாள்களில் தரமுயர்த்தி கொடுக்கப்படும் என்று முழங்கினர். ஆனால் மாதங்கள் கடந்தும் தரமுயர்த்தப்படவில்லை. இன்றும் கூட கல்முனை பிரதேச செயலக விடயம் எட்டாக்கனியாகவே காணப்படுகின்றது- என்றார். (ஒ.5)



## ரயிலைக்கூட விட்டுவைக்காத வெள்ளம்

கொழும்பு, டிசெ. 24

கடும் மழையால் ஆற்று வெள்ளத்தில் ரயில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கலாவேவ அவுகன பாலத்தில் சென்ற ரயிலே ஆற்று வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ.5)

## கொமன்வெல்த்திலிருந்து வெளியேறட்டும் இலங்கை

### ஓமல்பே சோபித தேரர் காட்டம்

புலம்பெயர் தமிழர்களுக்கு கூஜா தூக்கும் பொதுநலவாய அமைப்பிலிருந்து (கொமன்வெல்த்) இலங்கை உடனடியாக விலக வேண்டும் என்று எம்பிலிப்பிட்டிய ஓமல்பே சோபித தேரர் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'பிரிட்டன் பிரதமராக வெற்றி பெற்ற பொரிஸ் ஜோன்சன் தனது தேர்தல் வெற்றியின் பின் புலிகளின் அபிலாஷைகளை தூண்டும் விதத்தில் உரையாற்றியுள்ளார். இதன் மூலம் அவருக்கு புலிகளுடன் உள்ள தொடர்பு வெளிப்படையாகத் தெரிகின்றது.

பொதுநலவாய அமைப்பு இன்று வலுவிழந்த நிலைமையில் இருக்கிறது. இதற்கு உயிர் கொடுக்கவே இவர் முயல்கிறார். இலங்கையை இவர் இன்னும் தனது காலனித்துவ அடிமை நாடாக நினைக்கின்றார் போல. அவ்வாறு அவர் நினைப்பதாக இருந்தால் அது பெரும் தவறு. காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற எம்மை அவர் தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருப்பதற்கு முயற்சி செய்கிறார் எனவும் தெரிகிறது. எனவே எமக்கு பொதுநலவாய அமைப்பின் தொடர்புகள் இனித் தேவையில்லை. அதிலிருந்து விலகுவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (ஒ.5)



இடருக்குள்ளான

## அ'புரம்., பொலன்னறுவை மக்களை ஓடிச் சென்று பார்த்தார் கோத்தா

கொழும்பு, டிசெ. 24

வெள்ளப்பெருக்கால் இடருக்குள்ளான மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் தொடர்பில் கண்டறிவதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களின் சில பிரதேசங்களுக்குக் கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டார்.

அனுராதபுரத்திலுள்ள ஜனாதிபதி மாளிகையில் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளை நேற்றுக் காலை சந்தித்த ஜனாதிபதி, நிவாரண நடவடிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான நலன்பேணல் நடவடிக்கைகளை துரிதமாகவும், தொடர்ச்சியாகவும் முன்னெடுத்துச் செல்லுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

'இந்த நிவாரண நடவடிக்கைகள் இரண்டு கட்டமாக முன்னெடுக்கப்படுகின்றன. அனர்த்தத்தின்போது வழங்கப்பட வேண்டிய நிவாரணங்கள் மற்றும் அனர்த்தத்தின் பின்னர் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் அதில் உள்ளடங்குகின்றன. இந்த இரண்டு செயற்பாடுகள் தொடர்பிலும் அரசு மிகுந்த பொறுப்புடன் செயற்படுகின்றது' என்று ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அனுராதபுரம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலக பிரிவுகளில் 10 பிரிவுகள் அனர்த்தத்துக்கு முகம் கொடுத்துள்ள அதேவேளை டிசெம்பர் 20ஆம் திகதி முதல் நேற்று வரை ஆயிரத்து 561 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 181 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் 937 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 923 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கான சமைத்த உணவுகள் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன. வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் கண்டறிந்து உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார். அனர்த்த நிலைமை குறைவடைந்துள்ள பிரதேசங்களில் துப்புரவு செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மக்களுக்கான சுகாதார வசதிகள் குறித்து கண்டறிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சேதமடைந்துள்ள குளங்களின் மறுசீரமைப்பு, பெருந்தெருக்கள், கால்வாய்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை துரிதமாக இயல்புநிலைக்கு கொண்டு வருதல் ஆகியன தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு தொடர்பில் கண்டறிந்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள மத்திய நிலையங்கள் சிலவற்றிற்கும் ஜனாதிபதி கோத்தாபய சென்று அவர் மக்களைச் சந்தித்தார். (ஒ.5)

# ஐ.தே.கவுடன் சமரசத்துக்கு இடமில்லை

## மஹிந்த திட்டவட்டம்



கொழும்பு, டிசெ. 24

எதிர்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் எவ்வித சமரசங்களையும் செய்து கொள்ளாது. அந்தக் கட்சிகளுடன் பேச்சு நடத்தமாட்டோம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற தருணத்தில் சிறு கட்சிகள் கூட்டமைப்பை உருவாக்குவோம். ஒரு குழுவினர் தனித்து வேட்பாளரை நிறுத்துமாறும், மற்றுமொரு குழுவினர் ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியுடன் சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தனர். ஆனால், நாம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவை தவிர்த்து வேறு யாருடனும் கலந்துரையாடத் தயாராக இருக்கவில்லை.

இந்தத் தீர்மானத்தால் கட்சிக்கு பாதுகாப்பில்லையென சிலர் கூறினர். கட்சி பாதுகாப்பாகவிருந்து நாடு பாதுகாப்பில்லாதிருந்தால் அதில் அர்த்தமில்லை. ஆனால், இன்று நாட்டில் 100 சதவீதம் பாதுகாப்புள்ளதாக மக்கள் முழுமையாக நம்பிக்கை கொண்டுள்ளனர். கட்சியின் பாதுகாப்பை அவ்வாறு கருதிக் கொள்ளுமாறும் கோருகிறேன். எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் எவ்வித சமரசங்களையும் நாம் ஏற்படுத்திக் கொள்ள மாட்டோம். ஐ.தே.கவுடன் எவ்வித கலந்துரையாடல்களும் நடத்தப்பட மாட்டாது - என்றார். (ஒ.5,24)

# புத்தாண்டு ராசிபலன் 2020

தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றும் கும்ப ராசிக்காரர்களே, இந்த வருடம் உங்களுக்கு ஏழரைச் சனி ஆரம்பமாகிறது. இதனால் இந்த வருடம் சந்தோஷங்களையும் கஷ்டங்களையும் சமமான அளவு அனுபவிக்கப் போகிறீர்கள். குடும்பத்தில் சுபச் செலவுகள் ஏற்படும். குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே வாக்குவாதம், பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளமையால் உறவினர்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உங்கள் குடும்பத்தில் உங்களுக்கு அவமரியாதை ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொருள்கள் திருட்டு, போவதற்கான வாய்ப்பு உள்ளது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு ஏதேனும் உடல் பிரச்சினைகள் இருந்தால்உடனேமருத்துவரை அணுகுவது நல்லது. நாள்கள் கடந்தால் பிரச்சினை அறுவைச்சிகிச்சைவரை போய்விடும். இந்த வருடம் உங்களுக்கு சந்தோஷத்துக்கும் குறைவிருக்காது. சங்கடத்துக்கும் குறைவிருக்காது. கால் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வருவதற்கான வாய்ப்பு உண்டு.




**மாணவர்கள்:**
உங்கள் ராசியில் ஐந்தாம் இடத்தைக் குரு பார்க்கின்றார். உங்கள் படிப்பில் கவனக் குறைபாடு ஏற்படும். மற்ற விடயங்களில் கவனம் செலுத்துவதைத் தவிர்த்துவிட்டு படிப்பில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம் சங்கடங்களைத் தவிர்க்கலாம். பெற்றோர்களின் சொற்படி நடப்பது நல்லது.

**திருமணம்:**
உங்கள் ராசிக்கு குரு அதிசாரமாகப் பெயரும் சமயத்தில் குடும்பத்தில் சுபச்செலவுகள் ஏற்படும். திருமணம் நிச்சயிக்கப்படும். ஆனால் சனி 12ல் இருந்து இரண்டாம் இடமான, குடும்ப வாக்கு ஸ்தானத்தை பார்ப்பதால், நீங்கள் பேசும் வார்த்தையில் கவனம் தேவை. நீங்கள் பேசும் ஒரு தவறான வார்த்தை கூட உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளை நடக்க விடாமல் தடுத்துவிடும். இனிவரும் காலங்களில் கணவன்-மனைவி இருவருக்கும் வாக்குவாதம் ஏற்படக்கூடும் .

**வேலை வாய்ப்பு:**
வேலை கிடைப்பதில் சில சங்கடங்கள் இருக்கும். ஆனால் கடுமையான விடாமுயற்சியினால் உங்களுக்கான வேலை வாய்ப்பு விரைவில் கிடைக்கும். நீங்கள் எதிர்பார்த்த சம்பளத்தில் வேலை வாய்ப்பு கிடைக்காவிட்டாலும் கிடைக்கும் வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.

**சொந்தத் தொழில்:**
சொந்த தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு, உங்கள் ராசிக்கு விரய ஸ்தானத்தில் சனியும், குருவும் இணைந்து அமரப்போகிறார்கள். ஆரம்பத்தில் தொழில் மந்த நிலையில் இருக்கும். உங்கள் தொழிலில் முதலீட்டை அதிகப்படுத்த வேண்டிய சூழ்நிலை வந்தாலும், அதிகமான முதலீட்டை மூன்று வருடங்களுக்கு தவிர்ப்பது நல்லது. நஷ்டம் ஏற்படவாய்ப்புஉள்ளது. உங்கள்பங்குதாரர்களிடம் கவனமாகச் செயல்பட வேண்டும்.

**வேலைக்கு செல்பவர்கள்:**
நீங்கள் செய்யாத வேலைக்குக் கூட உங்களுக்கு இதுவரை நல்ல பெயர் கிடைத்திருக்கும். ஆனால் இனிவரும் காலத்தில் நீங்கள் கஷ்டப்பட்டுச் செய்யும் வேலைக்கு கூட நல்ல பெயர் கிடைக்காது. இந்த ஏழரை வருடத்திற்கு சில சங்கடங்களை அனுபவித்து தான் ஆக வேண்டும். வார்த்தையில் நிதானம் தேவை. வேலையை இழப்பதற்கு கூட நிலைமை மோசமாவதற்கு வாய்ப்பு உள்ளது. அலுவலகம் சம்பந்தப்பட்ட கோப்புகள் திருட்டு போகும் வாய்ப்பு உள்ளது. விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். குலதெய்வ வழிபாடு அவசியம். சாதம், வெல்லம், தேங்காய் இவைகளை ஒன்றாகப் பிசைந்து பசுமாட்டுக்குக் கொடுத்து வந்தால் சங்கடங்கள் குறையும்.



# அமாவாசை வழிபாட்டில் காகத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஏன்...?



அமாவாசை வழிபாட்டில் காகத்துக்கு முக்கியத்துவம் அ்ளிக்கப்படுகிறது. அன்று காகத்துக்கு சாதம் வைத்து அது சாப்பிட்ட பின்னரே உணவருந்தும் பழக்கம் நடைமுறையில் உள்ளது.
சனீஸ்வர பகவானின் வாகனமான காகம் எமலோகத்தின் வாசலில் இருப்பதாகவும், அது எமனின் தூதுவன் எனவும் கூறப்படுகிறது.
காகத்துக்கு சாதம் வைத்தால் எம லோகத்தில் வாழும் நமது முன்னோர்கள் அமைதியடைந்து நமக்கு ஆசி வழங்குவார்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது.
காகம் சாதத்தை எடுக்காவிட்டால் முன்னோர்களுக்கு ஏதோ மனக்குறை இருப்பதாகக் கருதுவது நம்பிக்கையாக உள்ளது.
அமாவாசையன்று தங்களுக்கு வழங்கப்படும் எள் தண்ணீரை பெற்றுக்கொள்வதற்காக, ஒவ்வொரு வீட்டு வாசலிலும் பித்ருக்கள் காத்து நின்று கொண்டிருப்பார்களாம்.
பித்ருக்களுக்கு தர்ப்பணம் கொடுக்க தை அமாவாசை சிறந்த நாளாகும். அன்று கடல் ஆறு, புண்ணிய நதிகள் போன்ற நீர் நிலைகளுக்குச் சென்று இறந்த தாய் தந்தையர்களை நினைத்து திதி கொடுக்கலாம்.
திதி கொடுக்கும் நாளில் சூரிய வழிபாடு செய்வது அவசியம். இறந்தவர்களின் நாள், திகதி தெரியாதவர்களும், வருடத்தின் 12 அமாவாசையன்றும் திதி கொடுக்க முடியாதவர்களும் தை, ஆடி மகாளய அமாவாசைத் தினங்களில் திதி கொடுத்தால் ஆண்டு தோறும் திதி கொடுத்த பலனை அடையலாம்.
இந்நாளில் தீர்த்தத் தலங்களுக்குச் சென்று எள், தண்ணீர் இறைத்து பித்ருக்களின் தாகத்தைத் தீர்க்கவேண்டும். இவ்வாறு செய்தால் அவர்கள் செய்த பாவங்கள் நீங்கி, அவர்களுக்கு முக்தி பேறு கிடைக்கும்.

# கருட தரிசனமும் - தீரும் பிரச்சினைகளும்



கருட பகவானை எந்தெந்த நாள்களில் தரிசனம் (வழிபாடு) செய்தால் என்ன பிரச்சினைகள் தீரும் என்பது குறித்து விரிவாக அறிந்து கொள்ளலாம்.

**ஞாயிறு - பிணி விலகும்**

**திங்கள் - குடும்ப நலம் சிறக்கும்**

**செவ்வாய் - துணிவு பிறக்கும்**

**புதன் - பகைவர் பலம் குறையும்**

**வியாழன் - நீண்ட ஆயுள் கிடைக்கும்**

**வெள்ளி - செல்வம் பெருகும்**

**சனி - முக்தி கிடைக்கும்**

## தொடரும்...

கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்பாக முற்பல் 11 மணியளவில் திரண்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

"காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது?", "காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகச் சர்வதேச விசாரணை வேண்டும்", "ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை இனவழிப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஒப்படை", "அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக எந்த நிபந்தனையும் இன்றி விடுதலை செய்", "பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கு" என்பன போன்ற வாசகங்கள் அங்கிய பாதாகைகளை ஏந்தி, கோசங்களை எழுப்பி அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நேற்று கிளிநொச்சியில் மழை பெய்திருந்தபோதும், அதைப் பொருட்படுத்தாது தங்கள் உறவுகளுக்காக அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அவர்களைத் திரும்பக் கொண்டுவர முடியாது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான இறப்புச் சான்றிதழை வழங்குவதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாகச் சிந்திக்க முடியும் என்று கூறியிருந்தார். (எ-160.35)

## கரு...

டத்தின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டு பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் பாட்டலி சம்பிக்க ரணவக்க கைதுடன் தொடர்புடைய ஏனைய அதிகாரிகளை வரவழைத்து நாடாளுமன்ற உறுப்பினரின் கைது தொடர்பில் சபாநாயகர் எச்சரிக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பெரும்பாலான கட்சித் தலைவர்கள் இந்தக் கைது தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணையகத்தின் நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்து விளக்கம் கோருவது என முடிவு செய்தனர்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நாடாளுமன்ற சிறப்புரி மையை மீறி சம்பிக்க கைது செய்யப்பட்டார் என்பதை ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொண்டனர் என சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ-22)

## ஜனவரி...

ளது.

சபாநாயகர் கருஜய சூரிய தலைமையில் நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. 8 ஆவது நாடாளுமன்றத்தின் 4 ஆவது அமர்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த அமர்வில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச அரசின் கொள்கைப் பிரகடனம் மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக நேற்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கைப் பிரகடனத்தையடுத்து பிற்பகல் 12.30 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. அதில் 2020ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் திகதியிலிருந்து சபையின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டிய முறைமைகள் குறித்து அவதானம் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 3 ஆம் திகதி பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணி வரை மீண்டும் நாடாளுமன்ற அமர்வைக் கூட்டுவதற்கும் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதில் புதிய நாடாளுமன்ற உறுப்பினர் சபாநாயகர் முன்னிலையில் பதவியேற்றுக்கொள்ளவுள்ளார்.

சபாநாயகர் கருஜய சூரிய நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவை உத்தியோகபூர்வமாக எதிர்க்கட்சித் தலைவராக அறிவிப்பது மற்றும் சிம்மாசன உரையின் அறிவிப்புக்களை ஒழுங்குமுறைப்படி அறிவிப்பதற்கும் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகருக்குக் காணப்படும் அதிகாரங்களுக்கு அமைய ஜனவரி 3 ஆம் திகதி அமர்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது என சபாநாயகர் இதன்போது கட்சித் தலைவர்களுக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சபை முதல்வர் மற்றும் ஆளும் கட்சியின் பிரதம கொறடா ஆகிய பதவிகள் தொடர்பிலும் ஜனவரி 3ஆம் திகதிக்கு முன்னர் அறியத்தர வேண்டும் என்றும், ஆளுந்தரப்பினர் சார்பில் கலந்துகொண்டவர்களிடம் சபாநாயகர் கரு ஜயசூரிய கேட்டுக்கொண்டார். (எ-22)

## என்னமோ...

நிற்கின்றனர்.

கோத்தாபய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக அங்கஜன் இராமநாதன் நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு முன்னாயத்தக் குழுக் கூட்டத்தை கூட்டுமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். கடந்த காலங்களில் இடம்பெற்ற அபிவிருத்தி மீளாய்வு தொடர்பிலேயே கூட்டம் இடம்பெறும் என்று கூறப்பட்டிருந்தது. மாவட்டச் செயலக உயர் அதிகாரிகளுக்கு, இந்தக் கூட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்கத் தேவையில்லை என்ற அறிவுறுத்தல் அலைபேசி ஊடாக வழங்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர், ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோருக்கு இந்தக் கூட்டத்துக்கான அழைப்பு அனுப்பப்படவில்லை.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு முன்னாயத்தக் குழுக் கூட்டம் என்று நேற்றைய கூட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும், கூட்டத்தின் இடையே பல தடவைகள் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், இந்த விடயத்தை கூட்டத் தீர்மானமாக எடுப்போம் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டப் பாணியில் நடத்திச் சென்றுள்ளார்.

'கடந்த காலங்களில் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக்கு கட்டாயம் எம்மை அழைத்திருக்கவேண்டும். நாம் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்மொழிந்து கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தோம். எம்மை அழைக்காமை தவறு' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

நடத்தப்பட்டது யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமா? அல்லது முன்னாயத்தக் கூட்டமா என்று தமக்குத் தெரியவில்லை என, யாழ்ப்பாண மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ.5,105)

## தமிழ்...

அமைச்சருமான டியூ குணசேகர.

சோசலிச மக்கள் முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் அரசியல் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. தமிழ் தேசிய கூட்டமைப்புப் பலமிழந்து புதிய கட்சிகள் தேர்தலுக்கு முன்னர் உருவாக உள்ளன. ஜனாதிபதித் தேர்தலில் வடக்கில் எமக்கு 5 சத வீத வாக்குகளும், கிழக்கில் 22 சத வீத வாக்குகளுமே கிடைத்தன என்று தெரிவித்துக் கொண்டு சும்மா இருந்து விட முடியாது. வடக்கு, கிழக்குக்குத் தேசிய முன்னுரிமை வழங்கி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதன்மூலமே அந்த மக்களின் உள்ளங்களை வெற்றிகொள்ள முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பாகவே செயற்பட்டு வருகின்றது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர்கள் மேற்கொண்ட பரப்புரைகள் தற்போது பொய்யாகி வருகின்றன. தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பாக இருந்த நம்பிக்கைக்குறைந்து செல்கின்றது. அதன் விளைவாகவே புதிய கட்சிகள் உருவாக வேண்டும் என்ற கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (எ)

## குருநக...

டுள்ளன என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர். அது தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரது வீட்டில் இருந்தே பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், கைது செய்யப்பட்டவர் 35 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக நடவடிக்கைக்காக காங்கேசன்துறைச் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர். (எ-106)

## கால்...

யனின் வருகையை நினைவுபடுத்தும் ஓவியம் வரையப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான சிலைகளை அமைக்கும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்தச் சிலைகளைத் திறந்துவைக்க கடந்த 20ஆம் திகதி முயற்சிக்கப்பட்டபோதும், முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளால் அது இடைநிறுத்தப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் பதில் முதல்வர் யாழப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக விவாதிப்பதற்கு சபையின் சிறப்பு அமர்வைக் கூட்ட வேண்டும் என்று தமிழ்த் தேசிய முன்னணியின் உறுப்பினர்கள் சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கமைய எதிர்வரும் 27ஆம் திகதி சிறப்பு அமர்வு நடக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-105)

## குளத்தில்...

பட்டபோதும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

இறப்பு விசாரணைகளைத் திடீர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)












# இராணுவ நகர்வுக்கு தயாராகின்றார் கிம்!



பியங்யங், டிசெ.24

பரபரப்பான சூழ்நிலையில் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், மூத்த இராணுவ அதிகாரிகளுடன் நேற்றுத் திடீர் ஆலோசனை நடத்தினார்.

அமெரிக்கா மற்றும் வடகொரியா இடையிலான சமரச பேச்சு நிறுத்தப்பட்டு உள்ளது. இதற்கிடையே இரு நாடுகளும் வார்த்தை மோதல்களில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் மோதல் வலுக்கும் சூழல் உருவாகி உள்ளது. இந்த பரபரப்பான சூழ்நிலையில் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், மூத்த ராணுவ அதிகாரிகளுடன் திடீர் ஆலோசனை நடத்தினார். நாட்டின் இராணுவத் திறனை மேம்படுத்துவது தொடர்பாக இந்த ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டதாக அந்த நாட்டு அரசு ஊடகத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (ம)



## போரிஸுக்கு ட்ரம்ப் அழைப்பு

வொஷிங்டன், டிசெ. 24

அமெரிக்காவுக்கு வருமாறு பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

இங்கிலாந்தில் 'பிரெக்ஸிட்'டை முன்னிலைப்படுத்தி அண்மையில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் பிரதமர் போரிஸ் ஜோன்சனின் பழமைவாத கட்சி தனிப்பெரும்பான்மையாக அமோக வெற்றி பெற்றது. இதையடுத்து. போரிஸ் ஜோன்சன் மீண்டும் பிரதமராகி உள்ளார். அடுத்த மாதத்துக்குள் 'பிரெக்ஸிட்'டை நிறைவேற்ற அவர் தீவிர முனைப்புக் காட்டி வருகிறார்.

இந்த நிலையில் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவுக்கு வருமாறு பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார். ட்ரம்பின் இந்த அழைப்பை போரிஸ் ஜோன்சன் ஏற்றுக்கொண்டார் என்றும் அமெரிக்க பயணத்துக்கான திகதி குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்றும் இங்கிலாந்து அரசு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## கானி மீண்டும் வெற்றி

காபுல், டிசெ. 24

ஆப்கனில் கடந்த செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி பொதுத் தேர்தல் நடந்து முடிந்தது. இதில் தலிபான்களின் அச்சுறுத்தலை மீறி 90 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தார்கள். அஸ்ரப் கானி மீண்டும் வெற்றிபெற்றார்.

ஆப்கானிஸ்தானில் நிலவும் போராட்டங்கள் காரணமாகவும், தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாகவும் தேர்தல் முடிவுகள் இரண்டு முறை தள்ளி வைக்கப்பட்டன.

இந்த நிலையில் சனிக்கிழமை வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் 50.64 வீத வாக்குகள் பெற்று குறுகிய பெரும்பான்மையில் அஷ்ரப் கானி வெற்றிபெற்றார். இதன் மூலம் ஆப்கன் அதிபராக இரண்டாவது முறையாக அஷ்ரப் கானி பதவி ஏற்க உள்ளார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அப்துல்லாவுக்கு 39.52 வீதமான வாக்குகள் கிடைத்துள்ளன. இந்த நிலையில் பொதுத் தேர்தல் முடிவுகளை அப்துல்லா நிராகரித்தார். (ம)



## ஆப்கனில் நிலநடுக்கம்

காபுல், டிசெ. 24

ஆப்கானிஸ்தானில் இந்துகுஷ் மலைப் பகுதியையொட்டி நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இதுகுறித்து இஸ்லாமாபாத்தில் உள்ள புவி அதிர்வு கண்காணிப்பு மையம் கூறுகையில், 'ஆப்கானிஸ்தானில் இந்துகுஷ் மலைப்பகுதியில் பூமிக்கு அடியில் 210 கி.மீ ஆழத்தில் பூகம்பம் நிலைகொண்டிருந்தது. ரிச்சரில் 6.4 அளவாகப் பதிவானது' எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)





## இன்றைய நாள்

**மேடம்:** திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். உறவினர், நண்பர் கூடுதல் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாராள பண வரவு கிடைக்கும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். இனிய வார்த்தை பேசி நன்மதிப்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவை பணி திருப்திகரமாக நிறைவேறும்.

**மிதுனம்:** பணிகளை நிறைவேற்ற கூடுதல் உழைப்பு அவசியமாகும். தொழிலில் உருவாகிற இடையூறை நண்பரின் உதவியால் சரி செய்வீர்கள். அளவான பண வரவு கிடைக்கும்.

**கடகம்:** சூழ்ச்சி மனதுடன் பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பண வரவை சிக்கனமாக செலவு செய்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு மனதில் புத்துணர்வு தரும்;..

**சிம்மம்:** இஷ்ட தெய்வ அனுக்கிரகம் பெறுவீர்கள். முக்கியமான விஷயத்தில் நல்ல பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில்கூடுதல் மூலதனம் செய்வீர்கள். லாப விகிதம் அதிகரிக்கும்.

**கன்னி:** வழக்கத்திற்கு மாறாக பணி தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரம் வளர கூடுதல் உழைப்பு அவசியம். புதிய இனங்களில் பண செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** செயல்களில் சுதந்திரமாக ஈடுபடுவீர்கள். புதியவர்களின் நட்பு மனதில் மகிழ்ச்சியை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல காரணி பலம் பெறும்.

**விருச்சிகம்:** அதிக பணி உருவாகி மனம் தளர வைக்கும். செயல்களில் சீர் திருத்தம் அவசிய மாகும். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். பணச் செலவில் சிக்கனம் நல்லது.

**தனுசு:** உங்கள் பேச்சு, செயலில் அறிவாற்றல் நிறைந்திருக்கும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் அபிவிருத்தி பெற சில மாற்றம் செய்வீர்கள்.

**மகரம்:** உங்களின் வெகு நாள் லட்சிய கனவை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார அணுகுமுறை சிறந்து நல்ல பலன் தரும். உபரி பண வருமானம் உண்டு.

**கும்பம்:** பொது விஷயத்தில் கருத்து சொல்லவேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். சேமிப்பு பணம் செலவாகும்.

**மீனம்:** கூடுதல் வேலைப் பளு ஏற்படலாம். வீண் பேச்சு பேசுபவரிடம் விலகுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும். பண வரவு சராசரி அளவில் இருக்கும்.

# சிரியாவில் இஸ்ரேல் தாக்குதல்



**டெல்அவிவ், டிசெ. 24**

**சிரியாவில் உள்ள ஈரான் ராணுவத் தளங்கள் மீது இஸ்ரேல் ராணுவம் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.**

இதுகுறித்துசிரிய அரசுஊடகத்தின் தரப்பில் தெரிக்கப்பட்டுள்ளதாவது:

'சிரியாவில் டமஸ்கஸ் நகரில் அமைந்துள்ள ஈரான் ராணுவத் தளங்கள் மீது இஸ்ரேல் ராணுவம் ஞாயிற்றுக்கிழமை வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதற்குப் பதிலடியாக சிரிய ராணுவத் தரப்பாலும் தாக்குதல் நடத்தப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத்தாக்குதல்களால் ஏற்பட்டபாதிப்புகள் குறித்த விவரம் இதுவரை வெளிவரவில்லை. எனினும் இந்தத் தாக்குதல் குறித்து இதுவரை இஸ்ரேல் பதிலளிக்கவில்லை. ஒக்டோபர் மாதத்திலிருந்தே சிரியாவில் உள்ள ஈரானின் ராணுவத் தளங்கள்மீதுஇஸ்ரேல்தாக்குதல்நடத்தி வருகிறது. இஸ்ரேல்சிரியா இடையேதீவிரவாதத்தாக்குதல்மற்றும்எல்லைப்பிரச்சினை தொடர்பாக அவ்வப்போது இருதரப்புக்கும் மோதல் ஏற்படுகிறது. இதில் இருதரப்பும்வான்வழித்தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. இஸ்ரேலைப் பொறுத்தவரை ஈரானைத் தங்களுக்கான அச்சுறுத்தல் கொண்ட நாடாகக் கருதுகிறது. இதனால் ஈரான் ஆதரவு நிலைப்பாட்டைக்கொண்டசிரியாமீதுஇஸ்ரேல் மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. இஸ்ரேலின்வடக்குஅண்டை நாடானசிரியாவில்ராணுவத்தளத்தைக் கொண்ட ஈரான், லெபனானில் ஹிஸ்புல்லா போராளிகள்ளை ஆதரிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## பூமியில் நீண்ட நடைபயணம்!



லண்டன். டிசெ. 24

பூமியில் மிக நீண்ட தூரம் நடந்து செல்லக்கூடிய ஒற்றை தூரம் எவ்வளவு என்பதை பிரபல பொறியியல் இணையதளம் வெளியிட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள மக்கள் பெரும்பாலும் ஆன்மீக நோக்கங்களுக்காக நடைபயண யாத்திரை செல்கிறார்கள். நாகரிகம் வளர்ச்சியடைவதற்கு முன்னால் மனிதன் அனைத்து இடங்களுக்கும்நடைபயணமாகவேசென்றான். பின்னர் விலங்குகளை பயன்படுத்தி தான் நினைத்த இடங்களுக்குச் செல்ல ஆரம் பித்தான். அதன் பின்னர் பிற தேசங்களுக்குச் செல்ல கடற்பயணம் மேற்கொண்டான். நாரிகம் வளர்ச்சியடைந்துள்ள இந்தக் காலத்தில், வாகனங்களின் பயன்பாடு அதிகம் உள்ளமையால்கடைத்தெருவுக்குக்கூடகாரில்செல்லும் நபர்களும் உள்ளனர் எனலாம். அந்த அளவிற்கு போக்குவரத்துத் துறையில் உலகம் வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்த நிலையில், பூமியில் மிக நீண்ட தூரம் நடந்து செல்லக்கூடிய தூரத்தை பொறியியல் நிறுவனமொன்று கணித்துள்ளது.

அதன்படி, தென் ஆபிரிக்க நாட்டின் கடலோரக் கிராமமான எல் அகுல்ஹாசில் இருந்துவடக்குரஷ்யாவின்மகடான்நகர் வரை உள்ள தூரமே மனிதன் அதிகபட்சமாகநடந்துசெல்லக்கூடியதாகும். மொத்தம் 14 ஆயிரம் மைல்கள் உடைய இந்த தூரத்தைகடக்க3ஆண்டுகள்ஆகும். (ம)

சிறிராம் ஜுவல்லர்ஸ்
பண்டிகையை முன்னிட்டு
தங்க ஆபரணங்களுக்கான
மாபெரும்
விலைத்
தள்ளுபடி
செய்கூலி, சேதாரம் இன்றி
1 பவுண் 22 கரட்
69500/= மட்டுமே!
ஆபரணங்களுக்கான தரச்சான்றிதழ் வழங்கப்படும்.
இவ் விலைத் தள்ளுபடி இம் மாதம் மட்டுமே
(23 தொடக்கம் 31 வரை மட்டுமே)
ஒரு முறை வந்து பாருங்கள் ஒத்துக் கொள்வீர்கள்!
No:193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
077 165 1729

TRADE FINANCE INVESTMENT PLC YAMAHA உடன்
இணைந்து வழங்கும் நத்தார் மற்றும் புத்தாண்டு பரிசு மழை
சிறப்பு விலைத் தள்ளுபடி
15,000/- முதல் 125,000/- வரை
இச்சலுகை டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ் இடம் இருந்து மட்டுமே!
Fascino Scooter
20,000/= பெறுமதியான Oppo AIK 2GB Ram 32GB Mem ஒன்றை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்
FZ-S V.3
25,000/= பெறுமதியான Oppo A5s (Finger Print) ஒன்றை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்
ஒன்றை கொள்வனவு செய்து
5 இலவச சேவை
2 வருடம் 30000 KM Warranty
Jacket இலவசம்
இடம் : நல்லூர் ரியோ ஐஸ்கிறீம் முன்பாக
காலம் : 20ல் இருந்து 24ம் திகதி வரை மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது) தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளுக்கு மட்டுமே
ஒன்றை கொள்வனவு செய்து
காட்சியறை: 62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 554 5843 | 077 662 3824



தேசிய மட்ட பளுதூக்கலில்

# யாழ். மாவட்ட பளுதூக்கல் சங்க மாணவர்கள் பதக்க வேட்டை

யாழ்ப்பாணம், டிசெ.24

இலங்கை பளுதூக்கல் சம்மேளனம் தேசிய மட்டத்தில் நடத்திய இளையோர்களுக்கான பளுதூக்கல் போட்டியில் யாழ். மாவட்ட பளுதூக்கல் சங்க மாணவர்கள் பதக்க வேட்டை.


டொறிங்ரன் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் யாழ்.மாவட்ட பளுதூக்கல் சங்கம் சார்பில் பங்குபற்றிய 17வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பளு தூக்கு போட்டியில் ஏ.விஜிதா 40கிலோ எடைப் பிரிவில் சீனேஸ் 38 கிலோ, கிளின்அன்ஜக் 48 கிலோ எடையுடன் மொத்தமாக 86கிலோ எடையைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும்,49 கிலோ எடைப் பிரிவில் டிலக்சியா சீனேஸ் 33 கிலோ, கிளின் அன்ஜக் 43 கிலோ எடையுடன் மொத்தமாக 96 கிலோ எடையை தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும்,49 கிலோ எடைப் பிரிவில் செல்சியா சீனேஸ் 35 கிலோ, கிளின்அன்ஜக் 42 கிலோ எடையுடன் மொத்தமாக 77 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், 20வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பளுதூக்கு போட்டியில் அபிசாக் 49 கிலோ எடைப் பிரிவில் சீனேஸ் 50கிலோ, கிகிளின் அன்ஜக் 60 கிலோ எடையுடன் மொத்தமாக 110 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும்,17வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பளு தூக்கு போட்டியில் தர்சிகா 55 கிலோ எடைப் பிரிவில் சீனேஸ் 40கிலோ,கிளின்அன்ஜக் 51 கிலோ எடையுடன் மொத்தமாக 91 கிலோ எடையை தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும்,20வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பளு தூக்கு போட்டியில் நிதுர்சனா 55கிலோ எடைப் பிரிவில் சீனேஸ் 60 கிலோ, கிளின்அன்ஜக் 65 கிலோ எடையுடன் மொத்தமாக 125 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும்,17வயதுக்குபட்பட்ட பெண்களுக்கான பளுதூக்கு போட்டியில் தனுசியா 71கிலோ எடைப் பிரிவில் சீனேஸ் 50 கிலோ, கிளின்அன்ஜக் 60 கிலோ எடையுடன் மொத்தமாக 110 கிலோ எடையைத் தூக்கிவெள்ளிப்பதக்கத்தையும், 81கிலோ எடைப் பிரிவில் சுகனியா சீனேஸ் 30கிலோ,கிளின்அன்ஜக் 40கிலோ எடையுடன் மொத்தமாக 70 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும்,17வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பளு தூக்கு போட்டியில் 67கிலோ எடைப் பிரிவில் சீனேஸ் 105 கிலோ,கிளின்அன்ஜக் 110கிலோ எடையுடன் மொத்தமாக 205கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். (23)

ஆண்களுக்கான தனிநபர், இரட்டையர் பூப்பந்தாட்டத்தில்

# யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த காண்டீபன் மகுடம் சூடினார்

கரணவாய், டிச.24

கிழக்கு மாகாண பூப்பந்தாட்டச் சங்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கிடையில் நடத்திய பூப்பந்தாட்டத் தொடரில் 40வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான ஆட்டத்தில் தனிநபர் மற்றும் இரட்டையர் ஆட்டங்களில் கிண்ணம் வென்றார் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த காண்டீபன்.



கிழக்கு மாகாண பூப்பந்தாட்டச் சங்கம் நடத்திய பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் திருகோணமலை மக்செல் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றன.

இதில் 40 வயது ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் காண்டீபனும் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த டிஸ்னியும் பலப்பரீட்சை நடத்தினர். மூன்று செற்களைக் கொண்ட இந்தப் போட்டியில் 21:19, 22:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி கிண்ணம் வென்றார் காண்டீபன்.

இதேவேளை, 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் கிண்ணம் வென்று அசத்தினர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த காண்டீபன்-குகதாஸ் இணை. இந்த இறுதியாட்டத்தில் திருகோணமலையைச் சேர்ந்த விஸ்ணுகாந்த்- சிறிமுருகன் இணையை எதிர்கொண்ட காண்டீபன் - குகதாஸ் இணை 19:21 21:15 21:12 என்ற புள்ளிகளி அடிப்படையில் கைப்பற்றி கிண்ணத்தைக் கைப்பற்றினர். (108, 23)

# பாடும்மீன் வாகை

யாழ்ப்பாணம், டிசெ.24

இலங்கை கால் பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

புத்தளம் லிவர்பூல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழஅணி மோதியது. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்று சமநிலையில் காணப்பட வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)






## சொந்த மண்ணில்

# 10 வருடங்களின் பின்னர் கிண்ணம் வென்றது பாக்.

நசீம் ஷாவின் அபாரமான பந்து வீச்சு கைகொடுக்க தமது சொந்த மண்ணில் பத்து வருடங்களுக்குப் பின்னர் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணி 263 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 191 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது.




பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 271 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது.

தனது இரண்டாம் இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நால்வரும் சதம் கடந்து அசத்த அணி 3 இலக்குகளை இழந்து 555 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. அணி சார்பில் அபிட் அலி 174 ஓட்டங்களையும், மசூட் 135 ஓட்டங்களையும், அசார் அலி 118 ஓட்டங்களையும், பாபர் அசாம் 100 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை அணியின் வெற்றிக்கு 476 ஓட்டங்கள் நிர்யணிக்கப்பட்டது. நேற்று முன்தின நாள் முடிவில் இலங்கை அணி 7 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது. ஒஷாடா பெர்னாண்டோ 102 ஓட்டங்களுடன் நேற்றைய இறுதி நாளுக்காகக் களமிறங்கி அதே ஓட்ட எண்ணிக்கையில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இந்தச் சதம் அவர் சர்வதேச டெஸ்ட் அரங்கில் பெற்ற முதலாவது சதம் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து வந்த வீரர்கள் ஓட்டமெதனையும் பெறாது வந்த வேகத்தில் நடையைக் கட்ட அணி 212 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

பந்து வீச்சில் நசீம் ஷா 5 இலக்குகளையும், யாசீர் ஷா 2 இலக்குகளையும் அதிகபட்சமாகக் கைப்பற்றினர்.



ஆட்ட நாயகன், தொடராட்ட நாயகன் விருதை பாகிஸ்தான் அணி வீரர் அபிட் அலி தட்டிச் சென்றார்.

முதலாவது டெஸ்ட் போட்டி காலநிலை சீரின்மையால் கைவிடப்பட்டதால் பாகிஸ்தான் அணி 1:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றி 10 வருடங்களுக்குப் பின்னர் சொந்த மண்ணில் தொடரைக் கைப்பற்றியது.

## இலங்கைக்கு எதிரான ரி– 20 போட்டியில் ரோகித் சர்மா, முகமது ஷமிக்கு ஓய்வு

### தவான் இணைப்பு

இலங்கை தொடருக்கான இந்திய ரி-20 அணியில் ரோகித் சர்மா, ஷமிக்கு ஓய்வு அளிக்கப்பட்டு, ஷிகர் தவான் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரை இந்தியா 2:1 என கைப்பற்றிய நிலையில் இந்திய அணி சொந்த மண்ணில் இலங்கைக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட ரி-20தொடரில்விளையாடுகிறது.

இதற்கான இந்திய அணியில் ரோகித் சர்மா, முகமது ஷமி ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. காயத்தில் இருந்து குணமடைந்த பும்ரா மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார். அதேபோல் ஷிகர் தவானும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான ரி-20 கிரிக்கெட் தொடர் முடிந்த பிறகு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. இதற்கான இந்திய அணியிலும் தவான் இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஓய்வை அறிவித்தார் பிலாண்டர்

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக தென்னாபிரிக்காவின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் பிலாண்டர் அறிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் பிலாண்டர், பந்தை ஸ்விங் செய்வதில் வல்லவர். அவர் இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியோடு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இதில் 2ஆவது டெஸ்ட் போட்டி கேப்டவுனில் ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இது பிலாண்டரின் சொந்த மைதானமாகும். எனவே இந்த போட்டியோடு சொந்த மைதானத்தில் விளையாடியதோடு தனது கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக் கொள்வதாக அவர் 



அறிவித்தார்.

பிலாண்டர் 60 டெஸ்ட் போட்டிகளில் 216 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். 13 முறை 5 இலக்குகளும், இரண்டு முறை 10 இலக்குகளையும் வீழ்த்தியுள்ளார். 30 ஒருநாள் போட்டியில் 41 இலக்கும், 7 ரி-20 போட்டியில் 4 இலக்கையும் வீழ்த்தியுள்ளார். டெஸ்ட் போட்டியில் 8 அரைச்சதங்களுடன் 1619 ஓட்டங்களையும் அடித்துள்ளார்.




# கழக உலகக் கிண்ணத்தில் லிவர்பூல் அணி மகுடம்

றொபேர்ட்டோ பேர்மினோ கூடுதல் நேரத்தில் கோல் அடிக்க பிளமெங்கோ அணியை 1:0 என வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது லிவர்பூல் அணி.

கட்டார் நாட்டில் இடம்பெறும் பிபா கழகங்களுக்கிடையிலான உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பிளமெங்கோ - லிவர்பூல் அணிகள் மோதின.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தமது திறமையைப் பயன்படுத்தி ஆடிய போதிலும் இரு அணிகளாலும் கோல்கள் எதுவும் பெற முடியவில்லை. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்தது முதல் இரு அணி வீரர்களும் எதிரணியின் கோல் கம்பங்களை நோக்கி பந்தை பல முறை நகர்த்திய போதும் நிர்ணயிக்கப்பட்ட ஆட்ட நிமிடங்கள் வரை அவர்களால் கோல்கள் எதுவும் போட முடியாமல் போனது. ஆட்டம் முடியும் தறுவாயில் லிவர்பூல் அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பு தவறவிடப்பட்டது.

கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டு 99 ஆவது நிமிடத்தில் லிவர்பூலின் றொபேர்ட்டோ பேர்மினோ கோல் அடிக்க லிவர்பூல் அணி 1:0 என்ற கணக்கில் திரில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்த வெற்றியின் மூலம் லிவர்பூல் அணி நடப்பு வருடத்தில் 3 கிண்ணங்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் மத்தி, நாவலர் பாடசாலை வீதியில் பிரதான வீதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் 17 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. துண்டு துண்டாகவோ முழுவதாகவோ பெற்றுக்கொள்ளலாம். (CS/30136) (11,17)

**077 615 8912**

**SLAS Open/Limited**

P.உமாசங்கர் & வளவாளர்கள்
இறுதிக் கருத்தரங்கு
தொடர் 1
நுண்ணறிவு - குருபரன்
பொது அறிவு - ராஜ்வன்
25.12.2019 புதன்
9am- 4.30 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்
நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
076 186 1986, 077 741 7143

**விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி**

இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

**வழிகாட்டல் செயலமர்வு**

அரச தொழில் நுட்ப உதவியாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சையை எதிர் கொள்பவர்களுக்கு

பரீட்சையை இலகுவாக எதிர்கொள்ள ஏற்ற வகையில்
கடந்தகால வினாத்தாள்கள் அனைத்தும் செய்து விடப்படும்

26.12.2019 வியாழன் 3.00 - 6.00 வரை
முற்பதிவுகளை மேற்கொள்ளவும் 077 248 7774
ஆசிரியர் திரு. P. சண்முகதாசன் (சண்)

**G.C.E (A/L) 2022**
**BIO & MATHS**

ஆரம்பம் - 27.12.2019

- Chemistry - Ka Subeesan
- Physics - R.Raakulan
- Bio - K.Kalaivanan
- Maths - K.Ainharan

(CS 30076)(14,17)

**THE SCIENCE CORNER**
Clock Tower Lane, Jaffna

தொடர்பு :
077 430 7829/ 076 545 6118

## ஜொலிஸ்ரார் அபார வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.24

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் கழகங்களுக்கு இடையிலான பிரிவு 3க்கான , இரண்டாம் சுற்றுப் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் அருண்குமாரின் அதிரடியாட்டம், கோபிராமின் சிறப்பான பந்து வீச்சின் உதவியுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 103 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 35.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 191 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பில் அருண்குமார் ஆட்டமிழக்கமால் 83 ஓட்டங்களையும், கிருஷோபன் 36 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் மயூரேஸ் 3 இலக்குகளை அதிகபட்சமாக வீழ்த்தினார்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி 29.2 பந்துப் பரிமாற்றங்களில் சகலஇலக்குகளையும் இழந்து 88 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 103 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

அணி சார்பில் அதிகபட்சமாக விஜயரத்னம் 27 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கோபிராம் 5 இலக்குகளையும், வாமனன் 4 இலக்குகளையும், யுமேஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (23)





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.